# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 10

19.03.2023




நெய்தல் கடற்கரை நகரில்... 02

AGRITECH 102 நிகழ்வும் விவசாய ஆராய்ச்சி 14

# வட பகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்


தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

# நெய்தல் கடற்கரை நகரில் சித்த மருத்துவ நிலையம்

- ஆர்.பவித்திரன் -



நாவற்குழியில் அமைந்துள்ள நெய்தல் கடற்கரை நகரில் "சுகதேகம்" என்ற பெயரில் சித்த மருத்துவத்தின் ஊடான இணைந்த மருத்துவ சேவை நிலையம் ஒன்று விரைவில் கட்டியெழுப்பப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் புதன்கிழமை இடம்பெற்றது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் திறந்துவைக்கக் கூடியவகையில் இதனைத் துரிதமாக கட்டியழுப்புவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனை உருவாக்குதலில் இருவர் முக்கியமான பங்களிப்பை வழங்குகின்றார்கள். ஒருவர் நெய்தல் கடற்கரை நகரை உருவாக்கிய சிவராஜா அனுராஜ். இதற்குத் தேவையான காணியை அவர் இலவசமாகக் கொடுத்திருக்கின்றார். அதனைவிட மூலிகைத் தோட்டம் ஒன்றையும், நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான மருத்துவமனை ஒன்றை அமைப்பதற்கான நிலத்தையும் அவர் வழங்குகின்றார்.

இரண்டாமவர் ஆஸ்திரேலியாவில் மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரியும் நித்தி கனகரட்ணம். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதலாவது விவசாய பீடத் தலைவராக கடமையாற்றிப் பின்னர் புலம் பெயர்ந்தவர்தான் நித்தி கனகரட்ணம். இந்த மருத்துவமனையை அமைப்பதற்கான நிதிப் பங்களிப்பை அவர் வழங்குகின்றார்.

> நாமும் மருத்துவம் சார்ந்த உல்லாசப் பயணத்துறையை வளர்த்தெடுக்க முடியும். கனடா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்த எம்மவர்களுக்கு தரமான மூலிகை மருத்துவத்தை வழங்குவதற்கு நாம் தயாராக இருந்தால், அவர்கள் நிச்சயமாக தமிழகத்துக்கோ, கேரளவுக்கோ செல்லாமல் நேரடியாக யாழ்ப்பாணத்துக்கே வருவார்கள்...

"பொப் இசையின் தந்தை" அல்லது "பொப் இசைச் சக்கரவர்த்தி" என்றுதான் நித்தி தமிழ் உலகில் சில தசாப்த காலத்துக்கு முன்னர் அறிமுகமானவர். "சின்ன மாமியே..", "கள்ளுக் கடைப்பக்கம் போகாதே.." என்பன அவரது புகழைக் கூறும் பாடல்கள். எம்.ஜி.ஆர். தமிழகத்தில் மது ஒழிப்பைக் கொண்டுவந்த போது நித்தியின் இந்தப் பாடல்தான் அதற்கான பிரச்சாரப் பாடலாக தமிழக அரசால் தெரிவு செய்யப்பட்டது. ஈழத் தமிழர்களுக்கு தமிழக மண்ணில் கிடைத்த ஒரு கௌரவம் இது.

நித்தி கனகரட்ணம் பல திறமைகளைக் கொண்ட ஒருவர். இசைத்துறை, விவசாயம், உணவுப் பராமரிப்பு, மொழி ஆய்வு என அவர் பல பரிமாணங்களில் தன்னை வெளிப்படுத்தியிருந்தாலும், சித்த மருத்துவத்தில் அவருக்குள்ள புலமையும் பற்றுதலும் அபரிதமானது.

தாயகத்தில் தரமான முறையில் சித்த மருத்துவத்தை - மூலிகை மருத்துவத்தைக கொண்டுவர வேண்டும் என்ற அவரது கனவுதான் நெய்தல் நகரில் இப்போது நனவாகப்போகின்றது. இதனை சில மாதங்களிலேயே கட்டிமுடித்து, எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இதனைத் திறந்து வைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனை அமைக்கப்படுவதன் மூலம் தரமான சித்த மருத்துவ சேவை எம்மவர்களுக்கு கிடைக்கப்













போகின்றது என்பது முதலாவது விடயம்.

எமது புலம்பெயர்ந்த சமூகத்தினர் கேரளா சென்று பெறக்கூடிய சிகிச்சையை யாழ்ப்பாணத்திலேயே வழங்கினால் - அதன் மூலமாகக் கணிசமான அந்நியச் செலாவணி கிடைக்கும் என்பது இரண்டாது விடயம்.

பலருக்கு இதன் மூலமாக வேலை வாய்ப்பும் கிடைக்கும். குறிப்பாகச் சித்த மருத்துவத்துறையில் படித்து பட்டம் பெற்றவர்களுக்கு இந்த சிகிச்சை நிலையம் வாய்ப்பைக் கொடுக்கப்போகின்றது என்பது மூன்றாவது விடயம்.

மூலிகைப் பண்ணை ஒன்றும் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கான மருத்துவ மனை ஒன்றும் கூட இதன் அடுத்த கட்டமாக உருவாக்கப்படவிருக்கின்றன. இதனைவிட வடக்கில் ஆங்காங்கே கவனிப்பாரற்றுக் கிடக்கும் மூலிகைச் செடிகளுக்கும் கிராக்கி ஏற்படப்போகின்றது.

உல்லாசப் பயணத்துறையைப் பொறுத்தவரையில் மருத்துவம் சார்ந்த உல்லாசப் பயணத்துறை **(Medical tourism)** என்பது முக்கியமானது. இந்தியாவில் தமிழகத்திலும், கேரளாவிலும் இது பெருமளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கின்றது. கேரளாவுக்கும், தமிழகத்துக்கும் உல்லாசப் பயணிகளாக வருபவர்களில் கணிசமான தொகையினர் மருத்துவத் தேவைகளுக்காகவே வருகின்றார்கள். இதன்மூலம் இரண்டு மாநிலங்களும் பெருமளவு அந்நியச் செலாவணியை வருமானமாகப் பெறுகின்றன.

அதேபோல நாமும் மருத்துவம் சார்ந்த உல்லாசப் பயணத்துறையை வளர்த்தெடுக்க முடியும். கனடா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்த எம்மவர்களுக்கு தரமான மூலிகை மருத்துவத்தை வழங்குவதற்கு நாம் தயாராக இருந்தால், அவர்கள் நிச்சயமாக தமிழகத்துக்கோ, கேரளாவுக்கோ செல்லாமல் நேரடியாக யாழ்ப்பாணத்துக்கே வருவார்கள்.

ஆரோக்கியமான ஓர் உல்லாசப் பயணத்துறைக்கான தளமாக வளர்ச்சியடைந்து வரும் நெய்தல் கடற்கரை நகரில் இந்த "சுகதேகம்" என்ற மூலிகை மருத்துவமனை அமைந்திருப்பது மிகவும் பொருத்தமானது. கடற்கரை சார்ந்த - மரங்கள் நிறைந்த இயற்கை வனப்புடன் உள்ள இந்தப் பகுதியில் பாரம்பரிய மருத்துவத்துக்கான சிகிச்சை நிலையம் அமைக்கப்படுகின்றது.

புலம்பெயர்ந்த எம்மவர்களை மட்டுமன்றி, மேற்கு நாடுகளின் உல்லாசப் பயணிகளையும் கவரும் இடமாக இது வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. ஏனெனில் ஆங்கில மருத்துவத்தில் விரக்தியடைந்த பலர் இப்போது இயற்கை மருத்துவத்தை நாடி வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பேராசிரியர் நித்தி கனகரட்ணம் முன்னெடுக்கும் இந்தப் பணிக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம், சித்த மருத்துவ பீடம் என்பன மட்டுமன்றி அனைத்துத் துறையினரும் ஆதரவாக இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

அடிக்கல் நாட்டும் நிகழ்வில் யாழ். அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினாராக கலந்துகொண்டார். இந்த சிகிச்சை நிலையத்தின் முக்கியத்துவத்தை விளக்கிய அவர், இதனை அமைப்பதற்கு தன்னால் முடிந்த எந்த உதவியையும் செய்வதற்குத் தயாராக இருப்பதாகவும் உறுதியளித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறை பீடாதிபதி டொக்டர் ஆர்.சுரேந்திரகுமாரன், யாழ். பல்கலைக்கழக பதிவாளர் வீ.காண்டீபன், யாழ். போதனா மருத்துவமனையின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் இளஞ்செழிய பாண்டியன் மற்றும் யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ துறையின் தற்போதைய மற்றும் முன்னாள் துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோருடன் சித்த மருத்துவம் தொடர்பான ஆர்வமுள்ள வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மதத்தலைவர்களும் கலந்துகொண்டு அறிவுரை மற்றும் ஆசிகளையும் வழங்கினர்.

நித்தி கனகரட்ணமும் அனுராஜும் இணைந்து ஆரம்பித்திருக்கும் இந்த முயற்சியின் பலனை தமிழ் மக்கள்தான் அனுபவிக்கப்போகின்றார்கள். அதுவும் விரைவில்... *

**மின்மடல் :** tamilseconomy@gmail.com
**தொலைபேசி :** 0777 276 949

# வரிக் கொள்கையும் போராட்டங்களும்

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிராகத் தொழிற்சங்கங்கள் இணைந்து முன்னெடுத்த வேலை நிறுத்தப் போராட்டம் புதன்கிழமை இடம்பெற்றது. அரச திணைக்களங்கள், பாடசாலைகள், வங்கிகள் எனப் பல்வேறு துறைகளைச் சார்ந் தவர்கள் இந்தப் போராட்டத்தில் இணைந்திருந்தமையால் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

அநீதியான வரிச் சட்டம் திருத்தப்பட வேண்டும், 20 ஆயிரம் ரூபாய் வாழ்க்கை செலவு கொடுப்பனவு, மின்சார கட்டணத்தை குறைக்க வேண்டும், அரச அடக்குமுறைகளை நிறுத்த வேண்டும், அதிகரித்த வங்கிக் கடன் வட்டி வீதத்தை குறைக்க வேண்டும், உள்ளூராட்சி தேர்தலை உடன் நடத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இருந்தபோதிலும் அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைதான் பிரதான கோரிக்கையாக இருந்தது.

இந்தப் போராட்டம் வெற்றியா தோல்வியா என்ற விவாதங்கள் ஒருபுறம் இடம்பெற்றுக்கொண்டிருந்தாலும், சாதாரண மக்களைப் பொறுத்தவரையில் இதன் பாதிப்புக்கள் பாரியதாகவே இருந்துள்ளன. பாடசாலைகள் மூடப்பட்டன, பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன, மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதில் எதிர்கொண்ட பிரச்சினைகள் என மக்களுக்கு நெருக்கடியைக் கொடுத்ததாகவே இந்தப் போராட்டம் முடிவடைந்தது.

கொரோனாப் பேரிடரினாலும், பொருளாதார நெருக்கடியாலும் ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து நாடு மீண்டெழுந்துகொண டிருக்கும் நிலையில், இந்தப் போராட்டம் ஒரு பலப்பரீட்சையாகவே இடம்பெற்றிருக்கின்றது. இதனால் பல கோடி ரூபா நாட்டுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்படுகின்றது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கே சிரமப்படும் நிலையில் இவ்வாறான போராட்டங்கள் தேவைதானா?

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை என்பது இன்று நாட்டையும், மக்களையும் கவனத்திற்கொண்ட ஒன்றாக வகுக்கப்படுவதில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்.) நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வகுக்கப்படுகின்றது. பாரிய கடன்பொறியில் சிக்கியிருக்கும் நாடு தன்னை பிணை எடுக்குமாறு நாணய நிதியத்திடம் சரணடைந்திருக்கும் நிலையில், அவர்கள் முன்வைக்கக்கூடிய நிபந்தனைகளைப் புறக்கணித்துவிட முடியாது என்பதும் உண்மை.

வரி அதிகரிப்பு உட்பட பல “அதிகரிப்புக்களுக்கு” ஐ.எம்.எப். நிபந்தனைகள்தான் காரணம். வரி என்பது உண்மையில் மக்களுக்கானது. வரியாகப் பெறப்படும் பணம் ஏதோ ஒரு வகையில் சமூகநலத் திட்டங்களாக மக்களைத்தான் சென்றடைய வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில், ஊழல் மோசடிகள் அதிகமாகவுள்ளதால் இதில் நம்பிக்கை வைக்கும் நிலையில் மக்கள் இல்லை. இது போன்ற மக்களைப் பாதிக்கும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போது சாதாரண மக்கள் அதனால் பாதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்!

# அன்புள்ள ஆசிரியருக்கு....






## அசோலா குறித்த கட்டுரை

தமிழர் பொருண்மியம் ஆசிரியருக்கு வணக்கம்...

ஒவ்வொரு வார இதழும் ஒவ்வொரு சிறப்பம்சங்களோடு வெளி வருவது மகிழ்ச்சியாய் இருக்கிறது.

அசோலா பற்றி எழுதி இருந்த கட்டுரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது தொடர்ந்து மிகச்சிறப்பாகப் பத்திரிகை வெளி வர எனது வாழ்த்துக்கள்.

**மு. சுந்தரலிங்கம் சாவகச்சேரி**

## தமிழ்க்கவியின் வாழ்வும் வளமும்

ஆசிரியருக்கு வணக்கம்

வாழ்வும் வளமும் பற்றி தொடர்ந்து எழுதி வரும் தமிழ் கவி அவர்களின் ஆக்கம் மிகவும் அருமையாக இருக்கிறது. பல பல புதிய தகவல்களை பொருண்மியம் எங்களுக்கு கொண்டு வரும் என்று நம்புகிறேன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தமிழர் பொருண்மியம் வார இதழுக்கு காத்திருக்கிறேன். நன்றி.

**பா .மதனகுமார் யாழ்ப்பாணம்**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத் துக்கு செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

-------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர் -** ----------------------------------------------------

**முகவரி -** ----------------------------------------------------

**தொலைபேசி இலக்கம் -** ------------------------------------

**சந்தாக் காலம் -** ------------------------------------------------

**செலுத்திய தொகை -** ---------------------------------------------

**செலுத்திய திகதி -** ----------------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,50,0050 ரூபா.**

**24 கரட் தங்கம் 163,900.00 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் நிலையில் வேலை நிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் தேவை தானா?

**எஸ்.மதனகுமார்**
**வவுனியா**

**பதில் -** உங்கள் கேள்வி நியாயமானது தான். இது அரசாங்கத்துக்கு எதிராகத் தமது பலத்தைக் காட்டுவதற்காக தொழிற் சங்கங்கள் முன்னெடுத்த ஒரு போராட்டமாகவே பார்க்கப்பட வேண்டும். அரசாங்கமும் வரி தொடர்பாகத் தாம் முன் னெடுத்த திட்டத்துக்கு மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்குப் பதிலாகப் போராட்டங்களை ஒடுக்குவதற்கான ஆயுதங்களைத்தான் கைகளில் எடுத் தது.

இந்தப் பிரச்சினைக்கும் ஏதோ ஒரு வகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான் காரணமாக இருந்துள்ளார். 2019 இல் அவர் அதிகாரத்துக்கு வந்த பின்னர் பெருமளவுக்கு வரிச்சலுகைகளை வழங்கினார். அடுத்ததாக வந்த தேர்தல்களை இலக்கு வைத்து அவர் அதனைச் செய்திருக்கலாம். ஆனால், இதனால் நாட்டின் வருமானம் பெருமளவுக்கு குறைந்தது. இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு அதுவும் ஒரு காரணம்.

தற்போது ஐ.எம்.எப். கொடுத்த அழுத்தங்களால் வரி அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. அன்றாட வாழ்க்கைச் செலவு பல மடங்காக அதிகரித்துள்ளது. கிடைக்கும் வருமானம் செலவுக்குப் போதவில்லை என சாதாரண மக்கள் திண்டாடுகின்றார்கள். இந்த நிலையில், அவர்களுக்கு கிடைக்கும் சொற்ப வருமானத்திதில் கூட, கை வைப்பதாக புதிய வருமான வரிக் கொள்கை அமைந்திருக்கின்றது.

இதனால் மக்களுடைய கொள்வனவு சக்தி குறைகின்றது. மக்களுடைய இந்த அதிருப்தியை கிளர்ச்சியாக மாற்றுவதற்குத்தான் தொழிற்சங்கங்கள் முற்பட்டுள்ளன. நெருக்கடியை மேலும் தீவிரமாக்குவதாகவே இவ்வாறான போராட்டங்கள் அமைகின்றன. அரசாங்கத்தின் வரிக்கொள்கையில் பல தவறுகள் இருக்கலாம். அதற்கான எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வழிகளை தொழிற்சங்கங்கள் கையாண்டிருக்கத் தேவையில்லை.

அதேவேளையில், அரசாங்கமும்




இவ்விடயத்தில் தமது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டும். வரி விதிப்பு தொடர்பில் பரந்துபட்ட ஆலோசனைகளை முன்னெடுத்து அதனை நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். நாட்டில் போஷாக்கின்மை அதிகரித்து வருவதை அன்றாடம் வெளிவரும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. இதனையும் அரசாங்கம் கவனத்திற்கொள்வது அவசியம்.

**உங்களுடைய கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி**
**tamilseconomy@gmail.com**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 140/= |
| உருளைக்கிழங்கு | - 140/= |
| பச்சைமிளகாய் | - 300/= |
| தக்காளி | - 150/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 160/= |
| கோவா | - 60/= |
| கரட் | - 100/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 180/= |
| வாழைக்காய் | - 180/= |
| சின்ன வெங்காயம் | - 250/= |
| பெரிய வெங்காயம் | - 150/= |
| பாகற்காய் | - 400/= |
| வெண்டிக்காய் | - 250/= |
| கருணைக்கிழங்கு | - 100/= |
| பயற்றங்காய் | - 200/= |
| லீக்ஸ் | - 200/= |
| பீற்றூட் | - 200/= |
| கறிமிளகாய் | - 300/= |
| முருங்கைக்காய் | - 1800/= |
| போஞ்சி | - 240/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 217/= |
| கனடா டொலர் - | 238/= |
| சீன யுவான் - | 47/= |
| யுரோ - | 348/= |
| ஜப்பான் யென் - | 2.4/= |
| சிங்கப்பூர்டொலர் - | 243/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 397/= |
| சுவிஸ் பிராங் - | 351/= |
| அமெரிக்க டொலர் - | 329/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 231/= |
| கனடா டொலர் - | 253/= |
| சீன யுவான் - | 50/= |
| யுரோ - | 368/= |
| ஜப்பான் யென் - | 2.6/= |
| சிங்கப்பூர் டொலர் | 241/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 419/= |
| சுவிஸ் பிராங் - | 374/= |
| அமெரிக்க டொலர் - | 346/= |



# இந்திய ரூபா பயன்பாட்டுக்கு வருமா?

இலங்கையில் டொலரைப் பயன்படுத்தும் போது அது ஒரு சர்வதேச அலகாகக் காணப்படும். ஆனால், இந்திய ரூபாவை பயன்படுத்த முற்பட்டால் சீனாவின் நாணயத்தையும் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அதனால் என்னைப் பொறுத்தவரையில் இந்திய ரூபாவைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இலங்கையில் இல்லை என்றுதான் சொல்வேன் என்று கூறுகின்றார் அரசியல் பொருளாதார ஆய்வாளர் கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி.

ஐ.எம்.எப். கடன், சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள வரிக்கொள்கை, இந்திய ரூபா பயன்பாட்டுக்கு வரலாம் என்ற தகவல்கள் தொடர்பாக கருத்து வெளியிட்ட போதே இதனை அவர் தெரிவித்தார். அவரது நேர்காணலின் முக்கிய விபரங்கள் வருமாறு-

**கேள்வி -** ஐ.எம்.எப். முன்வைத்துள்ள நிபந்தனைகள் எவ்வாறான தாக்கங்களை நாட்டின் அரசியலில் ஏற்படுத்தப்போகின்றன?

**பதில் -** ஐ.எம்.எப். நிபந்தனைகள் நாட்டில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றது. இலங்கை ஒரு குறைந்த வருமானம் பெறுகின்ற மக்களைக்கொண்ட நாடு. 70 வீதமான மக்கள் குறைந்தளவு வருமானத்தைக் கொண்டவர்களாகவே உள்ளனர். இந்த நிலையில் அவர்களுடைய அன்றாடச் செலவுகள் பாரியளவில் அதிகரிக்கும்போது, மக்கள் இயல்புநிலைக்கு மாறாகச் செயற்படும் நிலைதான் உருவாகும்.

அது அரசியல்ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும். அதிலும் முக்கியமாக தற்போதைய அரசாங்கம் ஒரு ஸ்திரமான அரசாங்கமாக இல்லாத காரணத்தினால், மக்கள் மத்தியில் சென்று அழுத்தங்களைக் கொடுத்து செயற்படுத்துமா என்பது கேள்விக்குறிதான். பிரச்சினைகளை மக்கள் மத்தியில் கொண்டுசென்று அவர்களையும் இதில் பங்காளிகளாக மாற்றும் தேவை ஒன்றுள்ளது. அவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை என்பதுதான் எனது கணிப்பு.

அதனால், இவ்வருடம் ஜூன், ஜூலை மாதங்களில் இந்த நாடு பெருமளவிலான அரசியல், பொருளாதார சிக்கல்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என எதிர்பார்க்கலாம்.



கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி

நேர்கண்டவர்
அகிலன்

**கேள்வி -** அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கை கொந்தளிப்பான நிலை ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந்த புதிய வரிக்கை கொள்கை ஏற்றுக்கொள்ளக்கூடியதா?

**பதில் -** அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரிகள் மீண்டும் பல்வேறு முறைகளில் மக்களைச் சென்றடைய வேண்டும். இதுதான் ஜனநாயக ரீதியான வரிக கொள்கை. இந்த வரிக் கொள்கையைத் தான் மேற்குலக நாடுகள் பின்பற்றுகின்றன. மேற்கு நாடுகளைப் பொறுத்தவரையில் ஒரு வரி செலுத்தப்படுவதென்பது ஒரு சேமிப்பாகக் கருதப்படுகின்றது. அங்கு அவர்கள் விருப்பத்துடனேயே வரியைச் செலுத்துவார்கள். ஏனென்றால், அவர்களுக்குத் தெரியும். இந்த வரி பின்னர் தமக்கு மீண்டும் கிடைக்கும் - பல்வேறு சலுகைகள் கிடைக்கும் என்று.

இலங்கையைப் பொறுத்தவரையில் அறவிடப்படும் வரிகளை எவ்வாறு பயன்படுத்தப்போகின்றார்கள் என்பதில் ஒரு திட்டம் இல்லை. அதற்கான ஒரு முறைமையை உருவாக்கி, அதில் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி - அதன் பின்னர் வரிகளை அறவிடுவதில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. அதாவது,

> “அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரிகள் மீண்டும் பல்வேறு முறைகளில் மக்களைச் சென்றடைய வேண்டும். இதுதான் ஜனநாயக ரீதியான வரிக்கொள்கை. இந்த வரிக் கொள்கையைத்தான் மேற்குலக நாடுகள் பின்பற்றுகின்றன. மேற்கு நாடுகளைப் பொறுத்தவரையில் ஒரு வரி செலுத்தப்படுவதென்பது ஒரு சேமிப்பாகக் கருதப்படுகின்றது.”

மக்களிடம் அறவிடப்படும் வரியானது மீண்டும் எவ்வாறு மக்களிடம் சென்றடைகின்றது என்பதற்கான ஒரு முறைமையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

**கேள்வி -** இந்திய ரூபாவை இலங்கையில் புழக்கத்தில் விடுவது, இரு தரப்பு பரிமாற்றத்துக்குப் பயன்படுத்துவது போன்ற பல விடயங்கள் பேசப்படுகின்றன. அதற்கான வாய்ப்பு உள்ளதா?

**பதில் -** சில நாடுகளில் இவ்வாறான நடைமுறை இருக்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரையிலும் இது புதிதான ஒரு விடயமல்ல. இலங்கையில் இது எந்தளவுக்கு சாத்தியமானது என்பது தெரியவில்லை. ஏனெனில் வரும் காலங்களில் சில மாற்றங்கள் ஏற்படும். இதன் போது இந்திய ரூபாவை நேரடியாகப் பயன்படுத்துவதற்கான ஒரு மார்க்கம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இவ்வாறு நடைபெற்றால், சீனாவும் தன்னுடைய நாணயத்தையும் பயன்படுத்துவதற்கான அனுமதியைக் கேட்கலாம். டொலரைப் பயன்படுத்தும் போது அது ஒரு சர்வதேச அலகாகக் காணப்படும். ஆனால், இந்திய ரூபாவைப் பயன்படுத்தும் போது - நாளை சீனாவின் நாணயத்தையும் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அதனால் என்னைப் பொறுத்தவரையில் அதற்கான வாய்ப்பு இலங்கையில் இல்லை என்றுதான் சொல்வேன்.

## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

உயர்தரத்தில் உயிரியல் இணைந்த கணித்துறையில் கற்று 3 பாடங்களிலும் தேர்ச்சி அடைந்து ( 3s+ ) எடுத்தவர்களுக் காக ஆனையிறவில் உப்பளம் ஒன்றில் ஆய்வுகூட பரிசோதகர் வேலைவாய்ப்பு. **Alex Salt Factory 772279984**

---

கிளி கரைச்சி தெற்கு பல நோக்கு கூட் டுறவு சங்கத்தின் கூட்டெரு உற்பத்தி நிலை யத்தில் ( செல்வாநகர் ) வேலை வாய்ப்பு கள் உண்டு. **GM - 0777765925**

---

கடைக்கு வேலைக்கு 2பேர் தேவை. பெண்கள். 18-30 வயதெல்லை. இடம் விசுவமடு. 0775406732

---

தமிழ் தட்டச்சு தெரிந்த பக்க வடிவமைப் பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத் திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந் துள்ள இயற்கை விவசாய பண்ணைக்கு தங்கி நின்று வேலைசெய்யகூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பா ளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்கிவிப்பு கொடுப்பனவுகளும் வழங் கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மை யில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற் பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகத்தில் வியாபாரத் தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத் திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நட வடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய் யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவ னத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும் புவர்கள் உங்களின் சுயவிபரக் கோவை யினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க வும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப் பிட்டு அனுப்பவும்)

---

யாழில் இருந்து வெளிவரும் தினசரி பத்திரிகைக்கு ஒன்றிற்கு ஒப்புநோக்குநர் **(Proof Reader)** தேவை. தமிழில் புலமை யும் தெளிவான கண்பார்வையும் உள்ள வர்கள் விண்ணப்பிக்கலாம். பகல் மற்றும் இரவு வேலைகள் உள்ளன. உங்களது விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி - 551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப் படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### தேவை

பன்றிகளுக்கு உணவுக்காக உணவுக் கழிவுகள் தேவைப்படுகின்றன. வட மாகாணத்தில் எங்கேனும் நாங்கள் வந்து எடுத்துக் கொள்வோம்.

தொடர்பு கொள்ள - 0777765847

---

3 மாத மரவள்ளி தடி தேவையாக உள்ளது. இருப்பவர்கள் தொடர்பு கொள் ளவும். 0713428281

### விற்பனைக்கு

---

பன்றி பண்ணை உயிர்வாயு கழிவுநீர் விவசாயத்துக்கு தரப்படும். பவுசர் உண்டு. டிராக்டர் உடன் வரவும். செல்வாநகர் கிளிநொச்சி. 0777765847

---

வவுனியா ஓமந்தையில் நல்ல இன கப்பல் வாழை குட்டி உண்டு தேவை யானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**TP - 0760856763**

---

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

## classified advertisement




150Kg கௌப்பி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு 0779791027

---

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாக தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு 0766482303

---

### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு 0777435557

---

A9 வீதியில் இருந்து 1 km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வு காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம்.

தொடர்புகளுக்கு 0779789177

### வீடு வாடகைக்குத் தேவை

திருநெல்வேலி, நல்லூர், கச்சேரி ஆகிய வற்றிற்கு அண்மித்த பகுதிகளில் இரண்டு பேர் (கணவன், மனைவி) தங்குவதற்கு சிறிய வீடு வாடகைக்கு தேவை. தொடர்புகளுக்கு 0758869168

---

யாழ் நகரினை அண்மித்த பகுதிகளில் வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடு அல்லது கட்டடம் வாடகைக்கு தேவை. நீண்டகால வாடகை அல்லது குத்தகை விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு 0777277009

---

### வாகனம் வாடகைக்கு

பன்றிகளுக்கு உணவு ஏற்றுவதற்கு பட்டா ஒன்று யாழ்ப்பாணத்தில் டிரைவருடன் வாடகைக்கு தேவை. மாதம் முழுவதும் வேலை. 777765847


# குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/- (USD 550)
பரப்பு 20 இலட்சம் (USD 5,500)

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd






- பேராசிரியர்
ஆசி கந்தராஜா -

# மாமரங்களைக் கவ்வாத்துப் பண்ணுவது எப்படி?

இலங்கையில் இப்பொழுது மா மரங்கள் பண்ணைகளில் அல்லது தோப்புக்களில் வளர்க்கப்படுவது மகிழ்ச்சி தரும் செய்தி. குறிப்பாக இலங்கையின் புதுவரவான ரொம் ஜே. சி. (Tom (E) JC) மாமரங்கள், வரிசையாக நடப்பட்டு காய்க்கத் துவங்கிவிட்டன. இதேவேளை




அடர் நடுகை என்னும் முறையில் மாமரங்களை பண்ணைகளில் மிக நெருக்கமாக நடுவதால், கிளைகள் ஒன்றோடு ஒன்று சிக்குப் பட்டு போதிய சூரிய ஒளி கிடைக்காமல் வளர்ச்சி குன்றி நிற்பதையும் பல இடங்களில் கண்டிருக்கிறேன்.

மாமரங்கள் 50 வருடங்கள், ஏன் 100 வருடங்கள்கூட நின்று காய்ப்பன. எனவே நடும்போதுள்ள மாமரக் கன்றுகளின் தோற்றத்தை வைத்து, நடவு இடைவெளியைத் தீர்மானிக்கக்கூடாது.

மாமரத்துடனான எனது நீண்டகால அனுபவத்தின்படி, ரொம் ஜே. சி. மாமரங்களை, வரிசையில் நடவு செய்யும்போது வரிசைகளுக்கு இடைப்பட்ட குறைந்த படச தூரம் 7 மீற்றரும் கண்டுகளுக்கு இடைப்பட்ட குறைந்த படசதூரம் 6 மீட்டரும் இருக்கவேண்டும். காரணம், எவ்வளவு தான் நாம் Cut back pruning முறையில் மாமரத்தைக் கவ்வாத்துப் பண்ணினாலும் 10 வருடங்களின் பின்னர் ஒரு மாமரக் கூடலின் விட்டம் 5 மீட்டராகுதல் இருக்குமல்லவா!

கறுத்தக்கொழும்பான், அம்பலவி, செம்பாட்டான் என்பன இயல்பாகவே உரமாக வளருவதால் மேற்சொன்ன அளவு சற்றுக்கூடலாம். மண்ணின் தன்மைக் கேற்பவும் இவை சிறிதளவு மாறுபடலாம்.

ஒட்டுச் சந்திப்பு (Graft union - ஒட்டுக் கட்டை ஒட்டுத்தண்டு சேரும் இடம்) நில மட்டத்துக்கு மேலே இருக்கவேண்டும். ஒட்டுச் சந்திப்பை மூடி மண் அணைத்தல் தவறு. அதேவேளை ஒட்டுக் கட்டடையில் முளைகள் அரும்பிக் கிளைகளை வளர விடு தல் தவிர்க்கப்படவேண்டும்.

உலர்வலய சுவாத்தியத்தில், நிலமட்டத்துக்கு மேலே 80-90 செ.மீட்டர் மட்டத்திலேயே கிளைவிட அனுமதிக்கவேண்டும். இதன் மூலம் நீர்ப்பாசனம், பசளையிடல், பூச்சிகள் கிருமிகள் மற்றும் களைகளைக் கட்டுப்படுத்துதல், அறுவடை போன்றவை இலகுவாகும். (படங்களைப் பார்க்க




வும்)

## கவ்வாத்துப் பண்ணுவது எப்படி?


நல்ல சூரிய ஒளி கிடைத்தல், அதிகளவு பூக்காம்புகளை உருவாக்குதல், சிறப்பான மகரந்தச்சேர்க்கை நடத்தல், இலகுவான அறுவடை என்பனவற்றை மனம் கொண்டே கவ்வாத்துப் பண்ணவேண்டும்.

ஒட்டு மாமர வளர்ப்பில் தண்டை (Main Stem) 80 - 100 செ. மீட்டர் வரை வளர விடுங்கள். அதற்குமுதலே கிளை விடுமாயின் பெலமான ஒரு தண்டை மாத்திரம் விட்டுவிட்டு (நிமிர்த்திக் கட்டி) மற்றவற்றை வெட்டிவிடுங்கள்.

80 - 100 செ. மீட்டர் உயரத்தில் வெட்டும் முதல் வெட்டு, ஒரு கணுவுக்கு (இலைக்காம்பு சேரும் பகுதி) 10 செ.மீ மேலே இருத்தல் வேண்டும். வெட்டுமுகம் காயதிருக்க மாட்டுச்சாணம் அப்பி நன்கு நீர்ப்பாய்ச்சிவிடவும்.

அடுத்த வருடம் பிரதான தண்டிலிருந்து வளரும் 3 - 4 பலமான கிளைகளை மட்டும் 60 செ.மீ. வரை வளரவிடுங்கள். பின்னர் அதன் நுனிப் பகுதிகளையும் மேலேசொன்ன முறைப்படி வெட்டிவிடவும். இவ்வாறு மரம் சடைத்து நல்லதொரு கிளைக்கூடல் வரும்வரை (நட்டு 3 - 4 வருடங்கள் வரை) தோன்றும் பூக்களை முறித்து விடுங்கள்.

மாமரத்தில் இளம் கிளைகளின் நுனிக்குருத்தே பூக்களாக மாறும். பெரிய




மா மரங்களின் கிளைக்கூடலின் உட்பகுதியில் இளம் குருத்துக்கள் இல்லாததால் மாமரத்தின் கிளைக்கூடலின் வெளிப் பகுதியில் மாத்திரம், பூக்கள் தோன்றி மாங்காய் காய்க்கும்.

மாங்காய் பிடுங்கியவுடன் மரத்திலுள்ள அரைவாசிக் கிளைகளை, குத்து மதிப்பாக நான்கு சென்றி மீட்டர் கீழே வெட்டி விடவேண்டும். இந்த "வெட்டு" கிளையிலுள்ள கணுவுக்கு மேலே இருக்கவேண்டும். அப்போதுதான் அடுத்துவரும் மாரி மழைக்கு, கணுவில் இருந்து பக்க அரும்புகள் தோன்றி வளர்ந்து, அதன் நுனிக் குருத்து அடுத்த வருடம் பூக்காம்பாகும்.

இதேபோல அடுத்த வருடமும் மிகுதிக் கிளைகளை வெட்டிவிட வேண்டும். இந்தவகையில் ஒரு பெரிய மரத்தின் கிளைக் கூடலின் வெளிப்புறத்தில் காய்க்கும் மாங்காய்களைவிட, சிறிய கிளைக் கூடல்கள் கொண்ட பல மாமரங்களில் அதிக மாங்காய்களைப் பெறமுடியுமென்பதை அனுபவ ரீதியாக நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA) பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்




# இலங்கை ரூபாவின் எதிர்காலம்

இந்தக் கட்டுரை எழுதுகையில் உலகத்தில் “சிறந்த செயல் திறன் நாணயமாக” இலங்கை நாணயம் காணப்படுகின்றது. அதற்கு காரணம் “அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த சில நாட்களாக யாரும் எதிர்பாராத வகையில் சடுதியாக அதிகரித்து காணப்படுகின்றமையே” ஆகும். இது உலகின் முதன்மைச் செய்தியாகவும் வியப்பூட்டும் நிகழ்வாகவும் முழு உலகத்தையும் திரும்பி பார்க்க வைத்துள்ளது. இதே மார்ச் மாதம் 2022 ஆம் ஆண்டு உலகில் மிகவும் வலுவிழந்த நாணயமாக இலங்கை ரூபாய் காணப்பட்டது. ஆனாலும் 2023 மார்ச் மாதம் இலங்கையின் ரூபாய் வளர்ச்சி அடைந்தது எல்லோரையும் திகைப்படைய வைத்துள்ளது.

குறிப்பாக கடந்த ஒரு சில நாட்களாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி ரூபா 320 இருந்து ரூபா 365 ஆக அதாவது ரூபா 40 ரூபா பெறுமதி அதிகரித்தமை எல்லோராலும் நம்ப முடியாமல் இருக்கின்றது. அவ்வாறு அவர்கள் சந்தேகக் கண்ணோடும் வியப்போடும் பார்ப்பதனை அலட்சியம் செய்து விலகிச்செல்ல முடியாது. குறிப்பாக இறக்குமதி ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்த மாற்றத்தினால் பெரும் குழப்பத்தில் உள்ளார்கள்.

பொதுவாகவே மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு ஒன்று இருந்தது. அது என்னவென்றால், இலங்கையின் ரூபா வருங்காலங்களில் மோசமாக வலுவிழந்து அமெரிக்க டொலருக்கு நிகராக ரூபா 400 வரை சென்று இலங்கையின் ரூபா செல்லா நாணயமாக மாறும் என்ற நோக்கில் பலர் செயல்பட்டு வந்ததை நாம் காணக்கூடியதாக இருந்தது. இதன் காரணமாகத் தங்களால் ஏதாவது இலாபம் அடைய முடியுமா எனக்கருதி பலர் வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பாக அமெரிக்கா டொலர், தங்கம் மற்றும் அது சார்ந்த முதலீடுகளில் ஈடுபட்டு வந்தனர். அவர்களின் அந்த எதிர்பார்ப்பை தவிடு பொடியாக்கி இன்று இலங்கை ரூபாய் பெறுமதி வளர்ச்சி அடைந்து வருகின்றமை வியாபார மட்டத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாறு ஒரு குறுகிய காலத்தில் “அப்படி இலங்கையில் என்ன நடந்துவிட்டது? இலங்கை ரூபாய் பெறுமதியின் இந்த வளர்ச்சி உண்மையான வளர்ச்சியா? ஆட்சியினை தக்க வைப்பதற்காகவும் வருகின்ற தேர்தலில் மக்களை கவர்வதற்காக அரசாங்கத்தினால் செயற்கையான செயற்பாடுகள் செய்யப்பட்டதா?” போன்ற பல வினாக்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன. அந்த கேள்விகளுக்கு விடை காணும் முகமாக இந்த கட்டுரை அமைகின்றது.

ஒரு நாணயத்தின் பெறுமதியானது அதனுடைய கேள்வி (Demand) மற்றும் நிரம்பல் (Supply) சார்ந்து அமைகின்றது. 2022 மார்ச் மாதம் அமெரிக்க டொலருக்கு நிகராக 203 ரூபாவாக இருந்த இலங்கை நாணயத்தின் பெறுமதி 2023 மார்ச் மாதம் 365 ரூபாவாக வலுவிழந்து காணப்பட்டது. இதற்கு மிக முக்கிய காரணங்களாக, அரசாங்கம் சரியான தீர்மானம் எடுக்காமை, வரி கொள்கைகளில் பல சலுகைகளை வழங்கி பல மாற்றங்கள் செய்து அதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஈட்ட வேண்டிய வருமானத்தினை பெற்றுக் கொள்ள முடியாமை போன்றவற்றைக் கூறலாம். இதன் காரணமாக இலங்கையின் அமெரிக்க டொலர் கையிருப்பில் பாரியளவு வீழ்ச்சி அடைந்தது. அவ்வாறு மிகுதியாக இருந்த அமெரிக்க டொலர்களையும் சாதுரியமாக திட்டமிடாத செலவுகளில் வீணடித்த காரணத்தினால் அமெரிக்க டொலர் கையிருப்பில் வரலாறு காணாத வீழ்ச்சி ஏற்பட்டது.

அது மாத்திரமல்லாது இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் அசாதாரண அரசியல் சூழ்நிலை போன்ற காரணங்களினால் இலங்கைக்கு வழமையான வகையில் கிடைக்கின்ற அந்நிய செலாவணி உட்பாய்ச்சல் தடைப்பட்டது. அந்த வகையில் பிரதானமாக, ஏற்றுமதி வருமானம் (Export Income) பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்தமை, வெளிநாட்டு வேலை செய்வோர் வாயிலாக கிடைக்கின்ற அந்நிய செலாவணி உட்பாய்ச்சல் தடைப்பட்டமை (Foreign Worker Remittances) மற்றும் உல்லாசப் பயணத்துறையில் (Tourism) ஏற்பட்ட பாதிப்பு, போன்றவற்றினை குறிப்பிடலாம்.

இதன் காரணமாக இலங்கை அரசாங்கத்தினால் அந்நிய செலாவணி கையிருப்பினை தக்க வைக்க முடியாமல் போய்விட்டது. அதே நேரம் வெளிப்பாய்ச்சலுக்கு தேவையான அந்நியச் செலாவணி குறிப்பாக அமெரிக்க டொலரினை பெற்றுக் கொள்ளமுடியாமல் போனதும் பாரதூரமான விளைவினை ஏற்படுத்தியது.

இலங்கை தனக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளினை இறக்குமதி வாயிலாக பூர்த்தி செய்து வருகின்றது. இவ்வாறான அத்தியாவசிய இறக்குமதி, வெளிநாட்டு கடன் மற்றும் கடனுக்கான வட்டி போன்ற தேவைகளுக்கு வேண்டிய அந்நிய செலாவணி கையிருப்பு இல்லாமையினால் இக்கட்டான பொருளாதார நெருக்கடியினை இலங்கை சந்தித்து கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக கடந்த காலங்களில் மக்கள் பாரிய பஞ்சம், பொருட்கள் தட்டுப்பாடு என்பவற்றினால் துன்பப்பட்டு அத்தியாவசிய தேவைகளான உணவு, மருத்துவம், எரிபொருள், மின்சாரம் போன்றவற்றை பெறுவதற்கு நீண்ட வரிசைகளில் நின்று அதனைப் பெற்றும் அதே நேரம் தேவைக்கேற்ற விதத்தில் கிடைக்காமல் தமது சகஜ நிலைமைக்கு திரும்ப முடியாமல் இருந்தமை, போன்ற பல துர்ப்பாக்கிய நிகழ்வுகள் இதன் வாயிலாக ஏற்பட்டன.

அந்த நிலையில் அரசாங்கமானது ஒரு தீர்க்கமான முடிவினை எடுத்தது. அதன் வாயிலாக தற்காலிகமாக வெளிநாட்டுக் கடன்களையும் அதற்கான வட்டியினையும் திரும்ப செலுத்த முடியாத நிலை இருப்பதாகவும், திருப்பி செலுத்துவதற்கு போதிய கால அவகாசம் தேவையென கடன் கொடுத்த உலக நிதி நிறுவனங்களிடமும் மற்றும் நாடுகளிடமும் (உதாரணமாக சீனா, இந்தியா மற்றும் இதர நாடுகளிடம்) கேட்டுக்கொண்டது. இதன் வாயிலாக இலங்கையின் நன்மதிப்பானது உலகளாவிய ரீதியில் பாரியளவில் பாதிப்படைந்தது. இதன்காரணமாக உலக நாடுகள் இலங்கை நாட்டினை “வங்குரோத்து” அடைந்து விட்டதாக அறிவித்தனர். (Bankrupt Country).

இந்த கடுமையான பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டெழுந்து வரக்கூடிய ஒரே மார்க்கமாக "சர்வதேச நாணய நிதியத்திடம்" உதவி கேட்பது என்று முடிவெடுத்த இலங்கை அரசாங்கம், பல மாற்றங்களை கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியது. அதே நேரம், முன்னர் போன்று இல்லாமல் சர்வதேச நாணயம் நிதியம் மிக இலகுவாக இலங்கைக்கு கடனை வழங்காது முன்வைக்கப்படுகின்ற நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் நிறைவு செய்வதன் வாயிலாக இலங்கையினை இக்கட்டான நிலையில் இருந்து தூக்கிவிட அதாவது "Bailout" செய்வதற்கு 18 ஆவது தடவையாக வாய்ப்பளித்தது. அதனைக் கருத்திற்கொண்டு இலங்கை அரசாங்கமும் பல மாற்றங்களை கொண்டு வந்திருப்பதனை நாம் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

அவற்றில் முக்கியமாக வரி கொள்கை மாற்றங்கள், மின்சாரக்கட்டண அதிகரிப்பு, எரிபொருள் விலை அதிகரிப்பு, அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது மற்றும் நட்டத்தில் இயங்குகின்ற அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குதல் போன்ற பலவற்றினைக் குறிப்பிடலாம்.

அத்துடன் வெளிநாட்டு கடன்களையும் அதற்கான வட்டியினையும் திருப்பி செலுத்துவதில்லை என்ற தீர்மானத்தின் வாயிலாகவும் மற்றும் இறுக்கமான இறக்குமதி கட்டுப்பாடு வாயிலாகவும் அமெரிக்க டொலரின் வெளிப்பாய்ச்சல் செயற்கையாக குறைக்கப்பட்டது. இதன் காரணமாக இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரித்து காணப்பட்டது. அத்துடன் தற்போது நிலவுகின்ற பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை காரணமாக வெளிநாட்டில் வேலை செய்பவர்கள் அனுப்புகின்ற அந்நிய செலாவணி மற்றும் சுற்றுலாத்துறை மீண்டும் வழமைக்கு திரும்பி வந்துகொண்டு இருப்பதன் வாயிலாகவும் அமெரிக்க டொலரின் உட்பாய்ச்சல் அதிகரிக்கத் தொடங்கியது.



அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கொள்கை மாற்றங்களின் காரணமாக, இலங்கை பற்றிய ஒரு நல்ல எண்ணத்தினை உலக வங்கி மற்றும் கடன் கொடுக்கும் நிறுவனங்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றது. அதற்கு சான்றாக சர்வதேச



நிதிக் கூட்டுத்தாபனம் (IFC-International Finance Corporation) மூலமாக 400 மில்லியன் அமெரிக்க டொலர் SWAP வசதி வாயிலாக சடுதியாக இலங்கை நாணய சந்தையில் அமெரிக்க டொலரின் உட்பாய்ச்சல் அதிகரித்தது. இது மாத்திரமல்லாது மத்திய வங்கியானது வர்த்தக வங்கியிடம் பெற்றுக் கொள்கின்ற 25% வெளிநாட்டு நாணய கையிருப்பினை 15% குறைந்தமையும் பின்பு அவற்றினை நீக்கியமை போன்ற காரணங்களினால் இலங்கையின் நாணய சந்தையில் அமெரிக்க டொலரின் உட்பாய்ச்சல் அதாவது நிரம்பல் (Supply) கடந்த சில தினங்களாக தொடர்தேர்ச்சியாக அதிகரிக்க தொடங்கியது.

மத்திய வங்கியின் அவ்வாறான கொள்கைகளின் வாயிலாக இலங்கையின் அமெரிக்க டொலரின் கையிருப்பு அதிகரிக்கத் தொடங்கியது. அந்த நிலையில் டொலருக்கான கேள்வி குறைவடைந்தமையால் நாணய சந்தையில் டொலரின் பெறுமதி குறைவடைய தொடங்கியது. மேலும் அதிர்ஷ்டவசமாக "IMFமூலமாக முதலாவது உதவித் தொகை March மாத கடைசியில் வர உள்ளது" என்ற எதிர் கூறல் வாயிலாக அதிகப்படியான அமெரிக்க டொலர்கள் இனிவரும் காலங்களில் சந்தையில் வரவுள்ளது. அதே நேரம் அமெரிக்க டொலரின் கேள்வியில் மாற்றம் ஏற்படாத காரணத்தினால் ரூபாவின் பெறுமதி அதிகரித்து வருவதனை காணக்கூடியதாக இருக்கின்றது. இதன் காரணமாகத்தான் இலங்கையின் ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு நிகராக அதிகரித்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வகையான சூழ்நிலையில் தற்போது ஏற்பட்ட அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பானது தற்காலிகமாக இருக்கப் போகின்றது. காரணம்,

இலங்கை இறுக்கமான இறக்குமதி கட்டுப்பாடு, வெளிநாட்டு கடன், அதற்கான வட்டி போன்றவற்றை செலுத்தாத காரணத்தினால் இலங்கையின் உண்மையான டொலரின் தேவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஏதோ ஒரு நாள் இந்தக் கடனையும் வட்டியையும் நிச்சயமாக திருப்பி செலுத்த வேண்டும்.

2023 ஆண்டு இலங்கை 7 பில்லியன் அமெரிக்க டொலரினை செலுத்த வேண்டிய தேவை உள்ளது.

மொத்தமாக 54 மில்லியன் கடனையும் செலுத்த வேண்டும்.

நடைமுறையில் உள்ள தொடர்ச்சியான இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும். அவ்வாறு நீக்காவிடத்து, இலங்கையின் பொருளாதாரம் மேலும் பாதிப்படைந்து வியாபார நடவடிக்கைகளில் பாரிய சிக்கல்கள் ஏற்படும்.

ஆகவே மக்களின் சகஜ வாழ்க்கையை திருப்பிக் கொடுக்க முனையும் பொழுது அமெரிக்க டொலரின் தேவை பல மடங்காக அதிகரிக்கப் போகின்றது.

இவ்வாறான கட்டுப்பாடான நாணய முறைமையினால் (Controlled Exchange Rate System) அரசாங்கத்தினால் ஓரளவு இலங்கையின் ரூபாவினை காப்பாற்றக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் இலங்கை ரூபாவினை சந்தை நிலவரத்திற்கு ஏற்ப மிதக்க விடும் பொழுது (Floating Exchange Rate) அதனுடைய பெறுமதி சந்தை நிலவரத்திற்கு ஏற்ப தீர்மானிக்கப்படும். இனிவரும் காலங்களில் இலங்கையின் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு, வழமை போன்று இலங்கை செயற்பட தொடங்குமானால் தற்போதுள்ள இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு, அத்துடன் இலங்கை பெற்றுக் கொள்கின்ற வெளிநாட்டு வருமானங்களை ஒட்டுமொத்தமாக கணக்கிட்டு அதனுடைய இறக்குமதி, கடன் மற்றும் வட்டி போன்ற ஒட்டுமொத்த தேவையோடு ஒப்பிடும் பொழுது பாரிய இடைவெளி ஏற்படத்தான் போகின்றது.

எனவே தற்போது இலங்கை ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்ட வளர்ச்சியானது ஒரு குறுகிய கால செயற்பாடாகத்தான் அமையப் போகின்றது. இனிவரும் காலத்தில் இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்படுகின்ற சிறந்த கொள்கை, கொள்கை அமுலாக்கங்கள் மற்றும் அதன் வாயிலாக வெளிநாட்டு அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரிக்கச் செய்வதோடு, அதே நேரம் வெளிநாட்டு அந்நிய வெளிப்பாய்ச்சலினை செயற்கையாக கட்டுப்படுத்தாமல் சந்தை நிலவரத்தின் வாயிலாக ஈடுசெய்ய முடியும் என்கின்ற ஒரு ஸ்திரமான நிலையின் வாயிலாக மாத்திரமே இலங்கை ரூபாவின் உண்மையான பெறுமதியைத் தீர்மானித்து அதனை தக்க வைக்க முடியும்.

"முழுப்பொறுப்பையும் அரசாங்கத்திடம் மாத்திரம் விட்டுவிடாமல், நாட்டு மக்கள் அனைவரும் இதனை உணர்ந்து செயல்பட்டு வருவோமானால் நிச்சயமாக இலங்கை நாணயத்தின் பெறுமதியை சந்தை நிலவரத்திற்கு ஏற்ப உண்மையாகவே அதிகரிப்பை ஏற்படுத்தி, அழகிய இலங்கை நாட்டினை நாம் வழமை போன்று ஒரு வளர்ச்சி பாதைக்கு மீண்டும் கொண்டு செல்ல முடியும்".



# எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

"வேலியைச்சுத்தி நீலியும் பாம்பும்"

"பொட்டுப்போல இலையிருக்கும் பொறிபோலப் பூப்பூக்கும் தின்னக் காய் காய்க்கும் தின்னாத பழம் பழுக்கும்"

"மூண்டு பெண்டுகள் முக்காட்டுக்காறியள் வெய்யிலக்கண்டா வெவ்வேறாப் போவாளள்"

இதெல்லாம் எமது கிராமத்தின் வேலிப்பயிர்களை அண்டியதாக வந்த பழமொழிகள்.

முதலாவது உத்தமாகாணியையும், இரண்டாவது முருங்கையையும், மூன்றாவது முத்தாமணக்கையும் குறிக்கும். நவீனகாலத்தில் வாழ்பவர்களில் அதுவும் இளைய தலை முறைக்கு. இவை தெரிய



நியாயமில்லை. அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வேலியும் இல்லை. இந்த 'வேலியும் இல்லை' என்ற சொல்லை நீங்கள் இரட்டை அர்த்தம் தெரிகிறது என்று சொன்னாலும் எனக்குக் கவலையில்லை.

உத்தமாகாணியை பெருமருந்துக் கொடி எனவும் வைத்திய நிகண்டுகள் குறிப்பிடுகின்றன. இது நிலத்திலும் படரும் இயல்புடையது. நான் அடுத்ததாக சொல்ல வருவது முருங்கையைப்பற்றி. முருங்கை பற்றிய அருமையான கட்டுரை ஒன்றை ஆசி கந்தையா என்ற அறிஞர் பொருண்மியம் வார இதழில் எழுதியிருக்கிறார். அது முருங்கையை பலநூறு ஏக்கர்கணக்கில் பயிர் செய்வது பற்றியது. அதாவது வர்த்தகப்பயிர் பற்றியது.

நான் பேச நினைப்பதெல்லாம் எங்கள் வீட்டுக் கொல்லையில் வேலிக்குள், அடுக்களைக்குப்பின்னால் நிற்கும் பழைய முருங்கையைப்பற்றி. முருங்கை மரம் எனக்குத் தெரிந்து எழுபது எண்பது வருடங்களுக்கு மேல் நின்று பயன் தரக்கூடியது. எங்கள் வேலியில் நிற்கும் ஒரு முருங்கை. நான் குழந்தையாக இருந்தபோது அம்மா காய் ஆய்வது. தன் பேத்தியார் நட்டதாக சொல்வார். அது இன்னும் நிற்கிறது. கொப்புகளை தத்தமது கறித்தேவைகளுக்காக ஊரார் முறித்துக் கொண்டு போவதால் புதிய கிளைகளைப் பரப்பி இன்னும் குமரிபோல அழகாக நிற்கிறது. அடி மரத்துக்கும் ஆபத்துத்தான் அதன் காலுக்கடியில் போகும் வேரைக்கிழறி தொடை மொத்தமான வேர்த்துண்டங்களை மரத்துக்கு ஊறு வராமல் வெட்டிச் செல்வார்கள். அந்த பொறுமையான முருங்கை, இரண்டு மூன்றடிச் சுற்றில் கரடுமுரடான பட்டைகளையும் மொக்குகளையும் கொண்டு அழுவாரைப்போல நிற்கிறது.

இந்த முறிவு தெறிவு வைத்தியம் செய்பவர்களுக்கும் நோ எண்ணை தயாரிக்கவும் ஐம்பது அறுபது வருசம் வாழ்ந்த முருங்கையின் வேரிலிருந்து பட்டை எடுக்க வேண்டும். அந்தப்பட்டையை நான்கு அல்லது ஆறுவகை தானிய எண்ணையுடன் பதப்படுத்துவார்கள்.

நாமென்ன முருங்கையை நட்டு தண்ணீர் ஊற்றி பாடுபட்டா வளர்ப்போம். மரத்திலிருந்து அதன் கிளையை வெட்டி வேலியில் ஊன்றிவிட்டால் போதும். அது பாட்டிற்கு தளைத்து, தாய்மரம் காய்க்கும் போது தானும் நட்ட அந்த வருடமே காய்க்கத் தொடங்கிவிடும். முருங்கையிலை சுண்டல்சொதி என கறிக்குள் போட்டுவிடுவோம்.

அதன் சத்துக்கள் பற்றி தெரியாதவர்கள் யாரிருக்கிறார். வாரம் இருமுறை முருங்கையிலை சாப்பிட்டால் ரத்த அழுத்தமே விட்டுப்போகிறது என்பார்கள். ஊருக்குள் விருந்துகள் களியாட்டங்கள் என்றில்லை. வீட்டிலும் ஏதாவது பலகாரவகையை சமைத்து தாறுமாறாக சாப்பிட்டாலோ மன அழுத்தம் வந்தாலோ உணவு செமிக்காமல் போவதுண்டு அது வெளியேயும் வராமல் வாயிற்குள்ளேயே நின்று சாப்பிட்டவர் வயிற்றுவலியால் அவதிப்படுவார். அவருக்கு ரெண்டு உள்ளியைச் சுட்டு மிளகுடன் கலந்து கொடுப்பார்கள் அதற்கும் சரிவராமல் போனால் முருங்கையிலையை ஒரு கைப்பிடி எடுத்து ஒரு உப்புக்கல்வைத்து அம்மியில் அரைத்து கொட்டைப்பாக்களவான உருண்டைகளாகத் திரட்டி மூன்று உருண்டைகளை விழுங்கி தண்ணீர் குடித்தால் கைகளால் பிடித்து விட்டது போல வலி உடனே நிற்கும் என்ன வாந்தியாகவோ மலமாகவோ தின்றது வெளியே வந்து விடும். அற்ப விசயம் ,தை நாட்டு மருத்துவர்கள் வாய்பேசமல் செய்ய வேண்டும் என்பார்கள். அதாவது என்ன கொடுத்தோம் என்பது நோயாளிக்கு தெரியாமல் இருக்க வேண்டும்.

இதை நான் பல தடவை செய்து பலரை குணப்படுத்திய கதை உண்டு. ஒருதடவை 'ரிவிரச'என்றொரு இராணுவ நடவடிக்கை யாழ்ப்பாண மக்களில் வலிகாம மக்கள் இடம் பெயர்ந்து பெருமளவாக தென்மராட்சிக்குள் வந்து விட்டனர். நாங்கள் பெண் போராளிகள் இருக்க இடமின்றி ஒரு பெண்ணின் வீட்டுத் திண்ணையில் தங்கியிருந்தோம். சாப்பாடும் அப்படி இப்படித்தான் கிடைக்கும். கிடைக்காமலும் போகும். அங்கே ஒரு சாவு நடந்த வீட்டில் திதி கொடுத்தார்கள். எம்மில் மூவர் அந்தவீட்டில் வயிறு நிறைய சாப்பிட்டுவிட்டு வந்தனர். இரவு ஒருத்திக்கு வயிற்று வலி. வைத்தியசாலைகளோ மருந்துகளோ கடையிலும் இல்லை. சாதாரண பாவனைப் பொருட்களே கிடையாது. அவள் பெரும் குரலெடுத்து அழுகிறாள். சனம் சத்தங்கேட்டு வந்தாலும், எதுவும் செய்ய முடியவில்லை. எனக்கும் தற்செயலாகத்தான் நினைவுக்கு வந்து முருங்கை இருக்கா என்று கேட்டேன். அது ஒரு நாலு வீடு தள்ளி ஒரு ஒழுங்கை வேலியில் நின்றது. ஒருவர் தீப்பந்தம் எடுத்துக் கொண்டு என் பின்னேவர அந்த சாமத்தில் போய் முருங்கையிலை கொண்டுவந்து சொன்னது போல செய்தேன். இரண்டு நிமிடங்கூட இல்லை களகளவென வாந்தி எடுத்தாள். வயிற்று வலி போயே போய் விட்டது. இதுபோல பல.

இந்த முருங்கையிலையை அரைத்து கட்டிகளுக்கு பற்றுப் போட்டால் கட்டி கரைந்து போகும். சில நேரங்களில் அரையில் கட்டு வரும். அதன் அதைப்பு ஆரம்பிக்கும்போதே லேசாக காய்ச்சல் வரும். அரையாப்பில் கட்டு வந்தால் அது பிளவையாகும் வாய்ப்புகள் அதிகம். என என் பெரியப்பா சொல்வார். அரையிலும் கமக்கட்டிலும் வருகிற கட்டியை உடைக்க விடக்கூடாது. அதை உடைக்கவிட்டால் மீண்டும் மீண்டும் அதேயிடத்தில் கட்டி தோன்றும் என்பார். இது ஒரு அனுபவ உண்மை. தொடையில் அழுத்தம் தோன்றும்போதே முருங்கைப்பட்டையை



அதன் வளவளப்பான பகுதிதெரிய வெட்டிக் கொண்டு வந்து உறங்கப் போகும் போது அந்த அதைப்பில் வைத்து கையால் அழுத்திப் பிடித்துக் கொள்ள வேண்டும். அது எரிவது போன்ற உணர்வு வர எடுத்துவிடலாம். இப்படி உறக்கம் வந்து விட்டால் சரி. மறுபடி நாளையும் நாளை மறுநாளும் செய்ய, கட்டியா? எங்க? அது எப்ப சொன்னன்.? என நீங்களே மற்றவர்களை மடக்கலாம்.

இப்போது நாய் கடித்தால் ஊசி போடுகிறோம். எனக்கு என் பிள்ளைகளுக்கு சகோதரிகளுக்கு இன்னும்அயலவர்களுக்கு என பலருக்கு நாய்கடித்திருக்கிறது. அதுவும் வீடுகளில் காவலுக்கும் வேட்டைக்குமாக வளர்க்கும் நாய்கள். அப்பதான் வீட்டுக்கு வீடு ஏழெட்டு நாய்கள் இருக்குமே. வைத்தியசாலையும் கிடையாது. ஒரே மருந்து முருங்கையிலையில் வெள்ளை (சுண்ணாம்பு) வைத்து அரைத்துக்கட்டுவது. காயம் மாறும்வரை பாவற்காய், தயிர், பன்றியிறைச்சியை தவிர்த்து விட வேண்டும். அவ்வளவுதான் காயம் பிரச்சனை கொடுத்தால். வாய்பேசாமல் முருங்கைப் பட்டையை வாயால் கவ்வி உடைத்து வந்து அந்த எச்சிலோடு உரைத்துக் கட்டுவோம். எப்போதாவது நாய்களுக்கு விசர் வந்திருப்பது தெரிந்தால் அவற்றை கட்டிவைத்து குளிப்பாட்டிவிட்டால் அவை இறந்து விடும். அவற்றை தொலைவில் புதைப்போம். அதன்பின் வீட்டிலுள்ள என்ன, ஊரிலுள்ள அனைத்து நாய்களுக்கும் பத்து நாட்களுக்கு முருங்கைப்பட்டை கலந்த சோறுதான் கொடுப்பார்கள். நாய்கள் மறுபடி ஆரோக்கியமாக திரியும்.

முருங்கைத்தடி நடாத வேலிகள் கிடையாது. முருங்கையின் காய் ஒரு போகத்தில்தான் கிடைக்கும். அது அதன் மகத்துவம் தேவைப்படும் காலத்தில்தான் காய்களைத் தரும். காற்றில் சடைவிரித்து ஆடும் முருங்கைமரங்கள். நிறை புரதம் கொண்டவை காய்கள். இன்று வருடம் முழுதும் முருங்கைக்காய் கிடைக்கிறது. என்றாலும் யாழ்ப்பாணத்து வேலிகளில் காய்த்த முருங்கைகளின் இடத்தைச் சுவையைப் பெற முடியவில்லை. முருங்கைக்காய் குழம்பு கொதிக்கும் போதே பக்கத்து வீட்டார் கிடுகு வேலிக்குள் எட்டிப்பார்த்து "என்ன பாறியக்கா முருங்கைக்காயே வாசம் இஞ்ச வருது" என்பார். இப்ப பொரிச்சு வச்சாலும் முருங்கைக்காயின் மணம்?

முருங்கை மரத்துக்கு நீர் அதிகம் தேவையில்லை மழைகாலத்தில் அதிக நீர் வரும்போது அதை பிசினாக வெளியேற்றும் காய்களை தெரியும் அல்லவா? அது அவியவும் மாட்டாது. முருங்கைக்காயை அதன் பருவகாலத்தில் சந்தையிலேயே எடுக்க மாட்டார்கள் ஆடிமுதல் புரட்டாசி வரை அமோகமாக வரும் காய்களை ஐந்து ரூபாவிற்கும் விற்க முடியாது தினமும் இந்த சிலிப்பர் கட்டைதான் கறியா? என இளசுகள் அலுத்துக் கொள்வார்கள். முருங்கைகாய் கறி பொரிச்சகறி பால்க்கறி அதன் சதையை வழித்தெடுத்து ஒரு சுண்டல் எனப் பல வகைகளில் எமது பெண்கள் சமைப்பர்.

முருங்கைக்காயின் விதைகளை கிணற்று நீரில் இடுவதுண்டு. நீரைச் சுத்தமாக்கும் தன்மை அதற்கு இருக்கிறது என என் பாட்டி சொன்னதுண்டு. இப்போது அதை ஆய்வாளர்களும் உறுதி செய்திருக்கிறார்கள். என்ன மூத்தோர் சொன்னதை ஆராயமல் அப்படியே ஏற்றுக் கொண்டவர்கள் நாங்கள். இப்போது அவற்றை ஆதார பூர்வமாக நிறுவிக்காட்டினால்தான். பிள்ளைகள் நம்புகிறார்கள். ஆளை விடுங்கசாமி - எனக்கெதுக்கு வம்பு.

*

# AGRITECH 102 நிகழ்வும் விவசாய ஆராய்ச்சி புத்தாக்கம், மாற்று வளங்கள் பயன்பாடும்



## AgriTech | 102

**AGRITECH 102** என்பது சுயாதீனமாக இயங்கும் யாழ்.பல்கலைக்கழக விவசாயப் பட்டதாரிகள் குழு (அக்ரி-டாஸ்-போஸ்) விவசாயப் பீடம், யாழ் பல்கலைக்கழக வியாபார அலகு, விவசாயப் பீட மாணவர் ஒன்றியம், உள்ளூர் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் ஒருங்கிணைவினால் நிகழ்த்தப்படும் நிகழ்வாகும்.

விவசாயத்துறையில் காணப்படும் ஆய்வு மூலம் தீர்க்கப்பட கூடிய பிரச்சினைகளுக்கு பல்கலைக்கழகத்தின் இறுதி யாண்டு மாணவர்களின் ஆய்வின் மூலம் தீர்வை நோக்கியும் அதன் மூலம் புதிய தொழில்வாய்ப்புக்கள் புத்தாக்கங்களை உருவாக்க முயல்வதே இந்த நிகழ்வின் நோக்கம். விவசாயிகள், விவசாய உற்பத்தி நிறுவனங்கள் விவசாயத்திற்கு உதவும் உற்பத்தி நிறுவனங்கள், தொழில் முயற்சியாளர்கள், விவசாயம் சார்ந்த அரச மற்றும் தனியார் கல்வி, வணிக, ஆராய்ச்சி நிறுவனங்கள், பண்ணையாளர்கள், சூழலியல் செயற்பாட்டாளர்கள் போன்றோரை ஒன்றிணைத்து வலுவான தொடர்பாடலோடு தொழிற்படக்கூடிய சூழலை உருவாக்குவதும் இந்நிகழ்வின் இன்னுமொரு நோக்கமாகும்.

### அக்ரி-டாஸ்-போஸ்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டதாரிகள் நால்வரினது தொடர்ச்சியான கூட்டு முயற்சியினது வடிவமே அக்ரி டாஸ் போஸ் ஆகும். 2018 இன் இறுதிப் பகுதியில் குழுவாக இணைந்த இவர்கள் விவசாயத்துறையில் சவாலாக காணப்படும் பல விடயங்களைப் களப் பயணங்கள் நேர்காணல்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளினூடாக அறிந்து கொண்டு அதற்கான தீர்வுகளுக்காக தொடர்ந்து பணியாற்றி வருவதோடு தற்போது 15 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் இயங்கி வருகின்றனர். மேலும் தொடரும் காலங்களில் ஒருமித்த கருத்துக்கள், சித்தாந்தங்களுடைய விவசாயத்துறையில் தொடர்ந்து ஈடுபட விரும்புகின்றவர்களை இணைத்துக்கொள்ளவும் தயராக உள்ளார்கள்.

### *AGRITECH 101*

இந்த நிகழ்வானது 2019 டிசம்பர் 12 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பீட கேட்போர் கூடத்தில், (அறிவியல் நகர் , கிளிநொச்சி) நடைபெற்றது.




இந்த நிகழ்வில் சுமார் 150 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர். இதில் பல்வேறு விவசாய சங்கங்களைச் சேர்ந்த சுமார் 60 பங்கேற்பாளர்கள் மற்றும் விவசாயத்துறை தொடர்பான பொது மற்றும் தனியார் பங்குதாரர்கள் மற்றும் விவசாய பீடத்தைச் சேர்ந்த சுமார் 70 மாணவர்கள் மற்றும் 20 பணியாளர்கள் உள்ளனர். சர்வதேச நீர் மேலாண்மை நிறுவனத்தைச் சேர்ந்த (IWMI) மூன்று சர்வதேச பங்கேற்பாளர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்று தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

பங்கேற்பாளர்களுக்கு விவசாயம் தொடர்பான சமூக மட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகள் தெரிவிக்கப்பட்டன. பங்கேற்பாளர்களால் சுமார் 20 பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன.

பின்னர் விவசாயச் சங்கம் மற்றும் விவசாயம் தொடர்பான பொது மற்றும் தனியார் பங்குதாரர்களின் பிரச்சினைகளின் விருப்பத்தின் அடிப்படையில், பணியாளர்கள் மற்றும் விவசாயப் பீட மாணவர்களினால் பல்வேறு குழுக்கள் உருவாக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. கலந்துரையாடலை சரியான முறையில் வழிநடத்த ஒவ்வொரு குழுவிற்கும் வழிகாட்டிகள் நியமிக்கப்பட்டனர். கலந்துரையாடல் நிறைவடைந்த பின்னர் ஒவ்வொரு குழுவிலிருந்தும் மாணவர்கள்பங்குதாரர்களால்வழங்கப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன

**AGRI TASK FORCE** இன் ஏனைய செயற்பாடுகள் தொடர்சியாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக நேரடியான நிகழ்வையோ அல்லது செயற்பாடுகளை நடத்த முடியாமல்






போனாலும் கொரோனா பெரும் தொற்று காலத்தில் இணையவழி மூலம் பல பயிற்சி வகுப்புக்களை நடத் தியதோடு 2020 ஆம் ஆண்டில் வடமாகா ணத்தில் இயங்கும் இளம் விவசாயிகள் கழகங்களின் நெல் நாற்று நடுகை இயந் திரத்தினை பெற்று அதனை விவசாயிகள் மத்தியில் நடுகை செய்வதற்கான பயிற்சி மற்றும் சேவைகளை வழங்கி வருகின்றனர். 2021 ஆம் இறுதியில் இலங்கையில் விவசாய இரசாயனங்கள் தடை செய்யப்பட்டன. இதன் போது நெல் செய்கையில் 40 சதவீத இழப்பை ஏற்படுத்த கூடிய களைகளை கட்டுப்படுத்த முடியாமலும் களைகளால் ஏற்படும் ஏனைய நோய் மற்றும் பூச்சித்தாக்கங்களை கட்டுப்படுத்த முடியாமல் விவசாயிகளது விளைச்சல் பாரிய வீழ்ச்சியை அடைந்தது. ஆயினும் நெல் நாற்று நடுகை மூலம் நடுகை செய்யப் பட்ட வயல்களில் உற்பத்தி ரீதியலான செலவு குறைவாகவும் இரசாயனப் பயன்பாடு குறைவாகவும் விளைச்சல் வழமையானதாகவும் காணப்பட்டது

## ஆய்வு வெளியீடுகள்



ஆராய்ச்சிகள் பல செய்யப்பட்டாலும் அவை விவசாயிகளை சென்று அடைவது குறைவாக இருக்கிறது. ஆயினும் பெரும் தொற்றுக்கு பின்னர் அதிகமான மக்களிடம் அலைபேசிகள் உள்ளன. மேலும் விவசாயத் சார்ந்து இயங்கக் கூடிய பலரிடம் இணைய வசதி மற்றும் அலைபேசி உள்ளன. எனவே விவசாய ரீதியில் செய்யப்படும் ஆய்வுகளை எளிய தமிழில் தொழி பெயர்ந்து வெளியிட்டு வருகிறோம். இது சிரமமான பணியாகினும் இதனை மேலும் அனைவரிடமும் கொண்டு செல்வதற்கான முயற்சிகளை தொடர்ந்து எடுத்து வருகிறோம்.

கள ரீதியிலான அனுபவம் விவசாயிகளுடன் சிறந்த இடைவினைத்தொடர்பு, ஆராய்ச்சி மட்டத்திலான சிந்தனை, புத்தாக்கங்கள், மாற்று சிந்தனை போன்ற தன்மைகளுடன் விளங்கும் சிறந்த மனித ஆளணிவளங்களை எம்முடன் இணைந்து கொள்ள அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு –
மகேஸ்வரன் ரஜிதன்
0777 90 6383,
**Email- agritaskforceteam@gmail.com**
**website agritaskforce.com**

தமிழர் பொருண்மியம் வாரமலர்
TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
19.03.2023




**“சோப் உற்பத்திக்கான இயந்திர சாதனங்கள் அனைத்தையும் கனகராஜா யாழ்ப்பாணத்திலேயே செய்துகொள்வதற்கு முயன்றார். இரும்பு வேலைகளில் யாழ்ப்பாணத்தவர்கள் அந்தக் காலத்தில் திறமையானவர்களாக இருந்தார்கள். இரும்புப் பொருட்களைத் தயாரிப்பதில் வல்லவரான ஒருவர் மூலமாக இயந்திரங்களைத் தனக்குத் தேவையான வகையில் வடிவமைப்பதில் கனகராஜா வெற்றிபெற்றார்.”**

# யாழ்ப்பாணக் கைத்தொழில் முன்னோடி “மில்க் வைற்”!

பி.பார்த்தீபன்

சிறிய கைத்தொழில் ஒன்றை ஆரம்பிப்பதாக இருந்தாலும் கூட அதற்குத் தேவையான இயந்திர சாதனங்களை நாம் வெளிநாடுகளிலிருந்துதான் பெருமளவு செலவில் இறக்குமதி செய்கின்றோம்.

யாழ்ப்பாணத்தின் முன்னோடிக் கைத்தொழில்களில் ஒன்றான மில்க்வைற்




யாழ்ப்பாணத்திலேயே தயாரிக்கப்பட்ட இயந்திர சாதனங்களைக் கொண்டுதான் உற்பத்தி செய்யப்பட்டது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

இப்போதும் அந்த இயந்திரகளைக் கொண்டுதான் அதன் உற்பத்திகள் இடம்பெறுகின்றன. சில தினங்களுக்கு முன்னர் மில்க்வைற் நிறுவனத்துக்குச் சென்றபோது அவற்றை நேரில் பார்க்க முடிந்தது.

1927 ஆம் ஆண்டில் ஒரு குடிசைக் கைத்தொழிலாக மு.கந்தையா என்பவரால் மில்க்வைற் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது, இலங்கைத்தீவு முழுவதிலும் வரவேற்கப்படும் ஒரு சவர்க்காரமாக அது வளர்ச்சியடையும் என்று அவர் எதிர்பார்த்திருக்கமாட்டார். ஆனால் சில வருடங்களிலேயே இலங்கையின் பல பகுதிகளிலும் ””ஏழைகளின் சோப்“ என அது வரவேற்கப்பட்டது.

ஆரம்பத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர்தான் இங்கு பணிபுரிந்தார்கள். ஆரம்ப காலங்களில் தலையில் சுமந்தும், சைக்கிள்களிலும் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

சுதந்திரத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட முக்கியமான ஒரு சுதேச நிறுவனமாக இதனைக் கருதலாம்.

அப்போதே பிரித்தானியர்களின் “லிவ்வர் பிரதேர்ஸ்” நிறுவனத்துடன் போட்டி போட்டுக் கொண்டு மில்க்வைற் விற்பனை




செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தெற்கிலும் மில்க்வைற்

1950 க்கு பின்னர் மில்க்வைற் வளர்ச்சி துரிதமாக இருந்தது. கந்தையாவின் மகன் கனகராஜா இதனைப் பொறுப்பேற்ற பின்னர் பல புதிய விடயங்களில் அக்கறை காட்டியதுடன், விற்பனையையும் விரிவாக்கினார்.

ஆரம்பத்தில் உள்ளூரிலேயே விற்பனை செய்யப்பட்டாலும், பின்னர் தென்பகுதியை நோக்கியும் மில்க்வைற் வாகனங்கள் செல்லத் தொடங்கின. தென்பகுதியிலும் ஏழைகள், நடுத்தர மக்கள் மத்தியில் இதற்கு நல்ல வரவேற்பு காணப்பட்டது.

பரந்தன் இரசாயணத் தொழிற்சாலை மில்க்வைற் உற்பத்திக்குத் தேவையான எரிசோடாவைத் தாராளமாக வழங்கியது. இந்த இரசாயனத் தொழிற்சாலை வட பகுதியில் அமைந்திருந்தது மில்க்வைற் நிறுவனத்துக்குப் பலத்தைக் கொடுத்தது.

எரிசோடாதான் சவர்க்காரம் தயாரிப்பதற்கான பிரதான மூலப்பொருள். இதனை விடத் தேங்காய் எண்ணெயும் யாழ்ப்பாணத்தில் தாராளமாகக் கிடைத்தது. உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டே சோப்பை தயாரிக்கக்கூடியதாக இருந்தமையால் குறைந்த விலையில் அதிகளவு உற்பத்தியை கனகராஜாவினால் மேற்கொள்ள முடிந்தது.

ஏழைகள் மற்றும் நடுத்தர மக்களின் சோப் என வர்ணிக்கப்பட்ட மில்க்வைற் சோப் கட்டி ஒன்று 1970 களில் 15 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. அதனால், அனைத்துத் தரப்பினரும் மில்க்வைற்றின்




பாவனையாளர்களாகினார்கள்.

### முதலாவது நீலசோப்

இதனைவிட கனகராஜா மற்றொரு புரட்சியையும் செய்தார். மில்க்வைற் நீல சோப் ஒன்றையும் அவர் அறிமுகப்படுத்தினார். பாடசாலை மாணவ, மாணவிகளின் சீருடைகள், வெள்ளை வேட்டிகள், சேட்கள் என்பவற்ற துவைப்பதற்கு சோப்பை விட நீலப்பவுடரை தனியாக வாங்க வேண்டிய நிலை அப்போது இருந்தது. அதாவது பாவனையாளர்களுக்கு இது இரட்டிப்புச் செலவு. அதனைவிட நீலப்பவுடரை அளவாகப் பயன்படுத்தாவிட்டால் உடைகளின் வர்ணங்கள் மாறிவிடும்.

இந்த நிலையை அவதானித்த கனகராஜா, மில்க்வைற் நீல சோப்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்திய போது அதற்கு கணிசமான வரவேற்பு கிடைத்தது. குறைந்த விலையில் அவரால் இந்த நீல சோப்கள் சந்தைப்படுத்தப்பட்டன. இவ்வாறு நீல சோப் எதுவும் அப்போது சந்தையில் இருக்கவில்லை. நீல சோப் உற்பத்தியைப் பொறுத்தவரையில் கனகராஜா இலங்கையில் ஒரு முன்னோடியாக இருந்தார்.

சந்தையில் எது தேவையாக இருக்கின்றதோ, அதனைத் தயாரித்துக் கொடுக்க வேண்டும் என்பதில் அவர் அக்கறையாக இருந்தார். அதுதான் விற்பனையாகும் என்ற தொழில்நுணுக்கத்தையும் அவர் படித்திருந்தார்.



### உள்ளூர் இயந்திங்கள்

கனகராஜாவின் இந்த முயற்சிகளால் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் இருந்த மில்வைற் தொழிற்சாலை பிரமாண்டமான வளர்ச்சியைக் கண்டது. இரண்டு - மூன்று பேருடன் ஆரம்பிக்கப்பட்ட அந்த தொழிற்சாலையில் சுமார் 150 பேர் வரையில் பணிபுரியும் நிலை உருவாகியது. புதிய கட்டங்களும் அமைக்கப்பட்டன.

இந்த நிலையில் கனகராஜாவின் மற்றொரு புரட்சிகரமான செயற்பாடு தொடர்பாகவும் சொல்வது அவசியம். சோப் உற்பத்திக்கான இயந்திர சாதனங்கள் அனைத்தையும் அவர் யாழ்ப்பாணத்திலேயே செய்துகொள்வதற்கு முயன்றார். இரும்பு வேலைகளில் யாழ்ப்பாணத்தவர்கள் அந்தக் காலத்தில் திறமையானவர்களாக இருந்துள்ளார்கள். இரும்புப் பொருட்களைத் தயாரிப்பதில் வல்லவரான ஒருவர் மூலமாக இந்த இயந்திரங்களைத் தனக்குத் தேவையான வகையில் கனகராஜா வடிவமைத்தார்.

சோப் உற்பத்தியில் இவ்வாறு வெற்றிக் கொடி நாட்டிய கனகராஜா, அடுத்த கட்டமாக மற்றொரு உற்பத்தியிலும் தனது கவனத்



தைச் செலுத்தினார். இதுவும் சந்தை நிலைமைகளை ஆராய்ந்து அங்குள்ள தேவையை உணர்ந்த ஒரு முயற்சிதான்!

### வேப்பம் விதையிலிருந்து..

வீடுகள் தோறும் தேடுவாரற்றுக் கிடக்கும் வேப்பம் விதைளை வாங்கி அதிலிருந்து நான்கு விதமான தயாரிப்புக்களைச் செய்தார். ஒரு கிலோ வேப்பம் விதைகளைக் கொடுத்தால் ஒரு மில்க்வைற் தொப்பி என்று அவர் அறிவித்தார். இதனால் வேப்பம் விதைகள் அவரது தொழிற்சாலையில் குவியத் தொடங்கியது.

வேப்பம் விதைகளிலிருந்து அவர் தயாரித்தவைகளில் முதன்மையானது "நீம்" என்ற பெயரில் சந்தைக்கு வந்த நுளம்பு விரட்டி. இது சாம்பிராணி போலப் பயன்படுத்தக்கூடியது. காற்றையும் சுத்திகரிக்கும்.

இரண்டாவது வேப்பம் எண்டிணய் கலந்த நீம் சோப். மூன்றாவது வேப்பம் எண்ணெய், நான்காவது "நீமியா" என்ற பெயரிலான இயற்கை உரம் என்பன தயாரிக்கப்பட்டன. இவற்றுக்கான இயந்திரங்களையும் அவர் சொந்தமாகவே தயாரித்தார்.

நீம் பவுடர், நிமியா இயற்கை உரம் என்பவற்றுக்கான தேவை சந்தையில் தற்போதுள்ள போதிலும், இவற்றைத் தயாரித்து சந்தைப் படுத்துவதற்கு யாரும் இல்லை என்ற நிலை இப்போதும் தொடர்கின்றது.

தென்னிலங்கையின் பலம்வாய்ந்த காப்பரேட் கம்பனியான லிவ்வர் பிரதேர்ஸ் நிறுவனம் "சவரின் பார்சோப்" என்ற பெயரில் புதிய பார்சோப் ஒன்றை சந்தையில் இறக்கியது. வியாபாரப்போட்டிகள் தீவிரமடையும் போது இவ்வாறான புதிய உற்பத்திகள் மக்களைக் கவர்வதற்காகச் சந்



தைக்கு விடப்படுவது வழமைதான். இதற்குப் போட்டியாக மில்க்வைற் பார்சோப் என்ற பெயரில் பார்சோப் ஒன்றை கனகராஜா களமிறக்கினார். வியாபாரப் போட்டிகளுக்கு அவர் அஞ்சியவரல்ல.

### பொருளாதரத் தடை

வடக்கு கிழக்கில் போர் தீவிமடைந்த 1980 களின் பிற்பகுதியிலும், 90 களின்








முற்பகுதியிலும் வடபகுதி மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. தடை விதிக்கப்பட்ட பொருட்களில் சோப் பிரதானமானது. எந்தவகையான சோப்பையும் வடபகுதிக்குக் கொண்டுவர முடியாமல் இராணுவம் தடுத்தது. இந்த நிலையில் தமது மூலப்பொருட்களின் கையிருப்பு முடியும் வரை மில்க்வைற் உற்பத்திகள் வந்து கொண்டுதானிருந்தன.

ஆனால், போரின் உச்சமாக பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மூடப்பட்டது. எரிசோடாவைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டது. யாழ்ப்பாணத்துக்குள்ளேயே தேங்காய் எண்ணெயைப் பெறமுடியாத நிலையும் ஏற்பட்டது. இதனைவிட இடப்பெயர்வு போரின் பல்வேறு விளைவுகளால் மில்வைற் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. சில காலம் மூடப்பட்டது.

இப்போதும் மில்க்வைற் செயற்பட்டாலும் குறைவான உற்பத்திதான் செய்யப்படுகின்றது. கனகராஜாவின் மறைவைத் தொடர்ந்து அவரது சகோதரரின் இரண்டு மகன்களான தவகோபால், விஜயகோபால் ஆகியோர் இதனை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

### போக்குவரத்துச் செலவு

தற்போதைய நிலை தொடர்பாக ஆராய்வதற்காக அண்மையில் மில்க்வைற் நிறுவனத்துக்கு சென்ற போது, தவகோபாலை சந்திக்க முடியவில்லை. அவர் கனடாவுக்குச் சென்றிருப்பதாக அறிய முடிந்தது. விஜயகோபாலைத்தான் சந்திக்க முடிந்தது. சில முக்கியமான தகவல்களை விஜயகோபால் “தமிழர் பொருண்மியம்” வார இதழுக்குத் தெரிவித்தார்.

“யாழ்ப்பாணத்தில் உள்ள படகு கட்டும் நிறுவனங்கள் கண்ணாடி இழை தயாரிப்பதற்கு எம்மிடமிருந்துதான் சோப்பை வாங்குகின்றார்கள். கூட்டுறவு அமைப்புக்கள், மருத்துவமனைகள் எம்மிடமிருந்துதான் முன்னர் வாங்கினார்கள். இப்போது நிறுத்திவிட்டார்கள். யாழ்ப்பாணத்தில் இப்போது தேங்காய் எண்ணையும் விலை உயர்ந்துவிட்டது. முன்னர் தென்பகுதிக்குச் சென்று நீர்கொழும்பு போன்ற இடங்களிலிருந்து தேங்காய் எண்ணெயை வாங்கினோம். இப்போது போக்குவரத்து செலவீனங்கள் அதிகரித்திருப்பதால் அவ்வாறு செய்ய முடியவில்லை” என்று விஜயகோபால் தெரிவித்தார்.

“முன்னர் பாவித்த இயந்திரங்கள் சில செயற்படவில்லை. நீண்ட காலமாக - சுமார் 30 வருடங்களாக அவை பயன்படுத்தப்படாமலிருந்துள்ளன. அவை பயன்படுத்த முடியாதவையாக உள்ளன. ஒரு சில இயந்திரங்கள் இயங்குகின்றன. புதிய இயந்திரங்களை வாங்குவதென்றால் பல கோடி ரூபா தேவைப்படும்” எனத் தெரிவித்த விஜயகோபாலிடம், இதற்கு மேலும் சில கோடிகளைச் செலவிட்டால், உற்பத்தியை முன்னர் போல செய்ய முடியுமா? எனக் கேட்டபோது, “அதற்கேற்ற இலாபத்தைப் பெறக்கூடியதாக இருக்குமா? என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கும்” எனத் தெரிவித்தார்.

தற்போது சோப்பைவிட அமிர்தம் என்ற பெயரிலான நெல்லிக்கிரஷ், கிரேப் ஜூஸ் என்பனவும் தம்மால் தயாரிக்கப்படுவதாகவும் விஜயகோபால் தெரிவித்தார்.



# தூரநோக்கும் முதலீடும் ...

வேதநாயகம் தபேந்திரன்

பணம் படைத்த பலர் பணத்தை எப்படி முதலீடு செய்வதெனத் தெரியாமல் தடுமாறித் தாறுமாறாக முதலீடு செய்வதனைப் பார்க்கின்றோம்.

கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை நீண்ட கால நோக்கில் முதலிடும் போது தூர நோக்குத் தேவை.

இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் சரி,கிளிநொச்சி,வவுனியாப் பிரதேசங்களிலும் சரி பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை, ஏனைய உயர்கல்வி நிறுவனங்களில், உயர்தர வகுப்புகளில் கல்வியையும் தொடரும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தங்குமிட வசதிக்காக மிகவும் இடர்படுகின்றனர்.

ஆனால் இவர்கள் தங்குவதற்குரிய ஒழுங்காகக் கட்டமைக்கப்பட்ட கட்டிடங்கள் சரியான முறையில் விருத்தியடையவில்லை.

கல்வி நிறுவனங்கள் நீண்ட கால நோக்கில் இயங்குபவை. இந்த நிறுவனங்களில் கற்பவர்கள்,கற்பிப்பவர்கள், கல்விசாரா ஊழியர்கள் தொடர்பான சேவைகளை வழங்குவோர்கள் உறுதியான வருமானத்தை ஈட்ட முடியும்.

இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டை எடுத்துக் கொண்டால் கல்யாண மண்டபங்கள், சுப்பர் மாக்கெற்றுகள் கட்டுவதில் ஏட்டிக்குப் போட்டியாகப் பலர் உள்ளனர். வெளிநாடுகளில் எம்மவர் உழைத்து அனுப்பும் பெரும்தொகைப் பணம் இவற்றுக்கு வருவாயை அளிக்கின்றன.

நீண்டகால நோக்கில் இவை நிலைத்து நின்று வருமானத்தைத் தருமா? என்பது கேள்விக்குரியது. ஆனால் கல்விசார் நிறுவனங்கள் நீண்டகாலம் நிலைத்து நிற்பவை. சொந்தமாகப் பெரும் தொகைப் பணத்தை வைத்திருப்பவர்கள் இவற்றில் நம்பி முதலீட்டைச் செய்யலாம்.

இந்த முதலீடு மிகவும் பாதுகாப்பானது. அதே வேளையில் சமூகப் பெறுமதி மிக்கது. ஏனெனில் கல்வியின் ஊடாக வரும் உயர்வு பண்பாடு,பொருளாதாரம் ஆகிய இரண்டு தளங்களிலும் பெரும் மாற்றங்களை உருவாக்கும்.

கத்தியின்றி இரத்தமின்றிப் பெரும் வாழ்வியல் வளர்ச்சிகளை மனித நாகரிக முன்னேற்றங்களை கல்வி ஏற்படுத்தி உள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவப் பீடம் ராசபதையில் அமைந்துள்ளது. அது போல சித்த மருத்துவத்துறை கைதடியில் அமைந்துள்ளது. இங்கு கற்கும் பலநூற்றுக் கணக்கான மாணவர்கள் இப் பிரதேசத்திலேயே தங்குமிட வசதிகளைத் தேடுகின்றனர். பல்கலைக்கழகச் சூழலில் தங்கியிருந்து கற்பது கற்றலுக்குச் சிறந்தது.

இப் பிரதேசத்தில் புதிது புதிதாகப் பல கட்டிடங்கள் உருவாகின்றன. அவை தனிப்பட்டோரின் வீடுகளாகவே எழுகின்றன. இம் மாணவர்களுக்குத் தரமான தங்குமிட வசதிகளை வழங்குவதற்குரிய கட்டிட அமைப்புகள் போதுமான அளவில் இன்னமும் தோற்றம் பெறவில்லை.






கோடிகளை முதலிட்டால் பல மாதங்களில் அவற்றை வருமானமாக ஈட்ட வேண்டுமென்ற குறுகிய சிந்தனையே கல்வித்துறைக்கான சேவைகளை வழங்குவதற்கான முதலீடுகளை இடுவதற்குத் தடையாக உள்ளது.

அதனால் அப்படி வருமானம் தரக்கூடிய துறைகளையே நாடுகின்றனர். காலமாற்றம் சிலதுறைகளில் இடும் முதலீடுகளைக் காலாவதியாக்கி விடும். காலமாற்றத்தில் அள்ளுண்டு போகாத துறையாகக் கல்வி மீதான முதலீடு இருக்கும்.

இத்துறையில் இடும் முதலீடு ஒரு வகையான புண்ணியக் காரியம் எனலாம். பணம் படைத்தோர் நல்ல மனம் படைத்து நாட்டின் வளர்ச்சியைத் தூர நோக்கில் தரக்கூடிய துறைகளில் முதலிட வேண்டும்.



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர்

# கறவை மாடுகள் சினை பிடிக்காமையால் பாதிக்கப்படும் பண்ணைகள்

கறவை மாட்டுப் பண்ணைகளில் சினை பிடிக்காமை பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. பாலுற்பத்தியை பாதிக்கிறது. ஒரு மாடு சினைப் பட்டு கன்றினை ஈன்றால்தான் பால் உற்பத்தியாகும். வருடத்துக்கு ஒரு கன்றினை ஈன்றால்தான் அந்த மாட்டிலிருந்து தொடர்ச்சியாக பாலை பெற முடியும். அப்படி தொடர்ச்சியாக கிடைக்கும் பாலை விற்கும் போது தான் அந்த மாட்டின் மூலம் அது காணப்படும் பண்ணைக்கு வருமானம் கிடைக்கும்.எனவே ஒரு பண்ணைக்கு தொடர்ச்சியாக வருமானம் கிடைக்க மாடுகள் தொடர்ச்சியாக காலதாமதமின்றி சினைப்பட்டு கன்றுகளை ஈன வேண்டும்.

எனினும், நடை முறையில் பண்ணைகளில் கன்றினை ஈன்ற கறவை மாடுகள் மீளவும் சினைக்கு வருதல் தாமதமடைகிறது. அதுவும் வருடக் கணக்கில் அவை சினைப்படாமல் இருக்கும் நிலைமையே அவதானிக்கப் படுகிறது. இதன் காரணமாக பண்ணைகளின் பிரதான உற்பத்தியான பால் மூலமான வருமானம் கிடைக்காமல் போகிறது. மேலும், உற்பத்தியற்ற கால்நடைகள் இடத்தையும் உணவையும் விரயமாகுவதும் நிகழ்வதால் பண்ணையின் தேறிய இலாபம் குறைகிறது.பண்ணைகள் நட்டமடைகின்றன.இந்த வாரம் அப்படியான ஒரு பண்ணையைப் பற்றிப் பார்ப்போம்.

அந்தப் பண்ணை வவுனியா நகரில் அமைந்திருந்தது.உரிமையாளர் நீண்ட காலமாக பாரம்பரிய முறையில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுபவர். குறிப்பிட்ட காலத்துக்கு முன் அவர்கள் யாழ்பாணத்தில்



இருந்தும் குருநாகலில் இருந்தும் சில கறவை மாடுகளை கொண்டு வந்திருந்தார். சில மாடுகள் சினைப்பட்டும் சில மாடுகள் கன்று ஈன்ற நிலையிலும் வந்திருந்தன. கன்று ஈன்ற மாடுகளும சினையாக இருந்த மாடுகள் கன்றை ஈன்ற பின்னும் மீள சினைப்பாடாத நிலையே இருந்தது. கொஞ்ச காலம் அல்ல, சில மாடுகள் ஒன்றரை வருடம் வரை சினைப்படவில்லை. சில மாடுகள் சினை அறிகுறிகளை [estrus sign] காட்டிய பின் சினைப்படுத்திய போதும் அவை சினைப்பட்டிருக்கவில்லை. ஏனையவை நீண்ட காலமாக சினை அறிகுறிகளை காட்டவும் இல்லை. செயற்கைமுறை சினைப்படுத்துனர்களை கொண்டு தொடர்ந்து சினைப்படுத்திக் களைத்த உரிமையாளர் கடைசியில் சினை அறிகுறிகளை காட்டிய மாடுகளுக்கு நாம்பனைக் கொண்டும் முயற்சித்துப் பார்த்திருக்கிறார்.அதற்கும் பலன் பூச்சியமே.வெறுத்துப் போன அவர் தொடர்ந்து சினைப்படாத சில மாடுகளை இறைச்சிக்கும் விற்று விட்டார். இப்படியான நிலையில், ஓரிரு மாடுகள் தொடர்பாக ஆலோசனை பெற என்னிடம் வந்திருந்தார். அவரது கால்நடைகளுக்கு வழமையாக மருந்து எடுக்கும் கால்நடை வைத்தியரின் ஆலோசனைக்கு மேலதிகமாக இரண்டாவது அபிப்பிராயத்தை [second openion] பெறவே வந்திருந்தார்.

அவரது பண்ணையை பார்க்க சென்ற போது மாடுகள் இட நெருக்கடியில் வாழ்வதை காண முடிந்தது.அங்கு ஐம்பது வரையான நல்லினக் கறவை மாடுகள் இருந்தன. பெரும்பாலானவை மெலிந்திருந்தன.அவற்றின் எண்ணிக்கையை விட அவர் வளர்த்திருக்கும் புற்கள் குறைவாகவே இருந்தன.முறையான ஊட்டம் அவற்றுக்கு கிடைத்திருக்க வில்லை. பெரும்பாலான கால்நடைகள் வெப்ப அயர்ச்சி [Heat stress] அறிகுறிகளை காட்டின.சினைப் பரிசோதனையில் ஓரிரு மாடுகளின் சூலகங்களில் கட்டிகள் [ovarian cysts] இருந்தன. சிலவற்றில் சினைப் பருவ சுழற்சி நிகழ்ந்த அறிகுறியே இருக்க வில்லை [ Acyclic]. அவரின் பருவமடைந்த கன்று ஈன்ற ஒன்பது வரையான மாடுகள் மாதக் கணக்கில் சினைப் படாமல் இருந்தன. அவற்றுக்கு மேலதிகமாக இரண்டு வயதுக்கு மேற்பட்ட கன்றுகளும் [Heifer] சினை அறிகுறிகளை காட்டவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன் அந்தப் பகுதியில் ஏற்பட்ட கால்வாய் நோய் [Foot and mouth disease] ஏற்பட்டிருந்த போது இந்தப் பண்ணையின் மாடுகளும் பாதிக்கப்பட்டிருந்தன. கன்றுகள் குடல் புழு தாக்கத்துக்கு உட்பட்டு மெலிந்திருந்தன. வயதுக்கு ஏற்ற வளர்ச்சியும் இருக்கவில்லை. இட நெருக்கடி காரணமாக ஒவ்வொரு மாடுகளையும் அவரால் தனித்தனியாக பாராமரிக்க முடியவில்லை.சில வயதான,அதுவும் ஒரு வயது தாண்டிய கன்றுகள் இன்னும் தாயிடம் பால் குடிப்பதையும் அவதானித்தேன்.வயதான உரிமையாளரும் அவரின் மனைவியும் தான் அந்த பண்ணையை பராமரிபவர்கள். இதனால் பல கடினமான முக்கிய வேலைகள் செய்யப் படுவதில்லை.பண்ணை சுகாதாரமும்தரமாக இருக்க வில்லை.இளம் மாடுகளுக்கு மேலதிகமாக ஏழெட்டு கன்று

களை ஈன்ற வயதான மாடுகளும் அங்கு இருந்தன. பல இளம் நாம்பன் மாடுகளும் இருந்தன.

எனது பரிசோதனைகள் அவதானிப்புகளின் அடிப்படையில் சில முகாமைத்துவ மாற்றங்களை சொன்னேன். குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்கச் சொன்னேன். சினைப்படுதலை ஊக்குவிக்கும் சில நுண் மூலகங்கள் அடங்கிய கனியுப்பு கலவைகளை பரிந்துரை செய்தேன். சமச்சீரான உணவுகளையும் சுத்தமான தண்ணீரையும் தொடர்ச்சியாக கிடைக்கும் வண்ணம் இருக்க சொன்னேன். பெரிய கன்றுகள் தாயில் பால் குடிப்பதை தடுக்கச் சொன்னேன். பண்ணை சுகாதாரத்தை மேம்படுத்த சொன்னேன். தேவையற்ற வயதான மாடுகளை ,நாம்பன் மாடுகளை கழிக்கச் சொன்னேன். முடிந்தால் வேலைக்கு ஒரு ஆளை பிடித்து உரிமையாளரால் செய்ய முடியாத வேலைகளைச் செய்ய சொன்னேன். சினை அறிகுறிகளை நுணுக்கமாக இரவும் பகலும் அவதானிக்க சொன்னேன். ஒரு சில மாதங்களில் முன்பு



சினை அறிகுறிகளைக் காட்டாத ஒரு சில மாடுகள் சினை அறிகுறிகளை தெளிவாக காட்டத் தொடங்கின. அறிகுறிகளை சரியாக பார்த்த பின் சிறந்த சினைப் படுத்துனர்களை கொண்டு சினைப்படுத்தினர். முக்கியமாக ஒவ்வொரு மாடு தொடர்பாகவும் பதிவேடுகளை பேணச் சொன்னேன். குறிப்பாக சினை அறிகுறி தென்பட்ட நேரம், கொடுத்த மருந்துகள், கனியுப்புகள், சிகிச்சைகள் என சகலதையும். சில நாட்களின் பின் சில மாடுகளுக்கு சினைப் பருவ ஒருங்கிணைப்பை [estrus synchronization] செய்து அவற்றை சினைப்படுத்தினோம். அப்படியும் சினைப் படாத மாடுகளை விற்கச் சொன்னேன். கிட்டத் தட்ட 6-7 மாதங்களில் அவருடைய சகல மாடுகளும் சினைப்பட்ட நிலைக்கு மாற்றமடைந்தன. சினைப் படாத மாடுகளை விற்றுப் புதிய மாடுகளை வாங்கினார். அடுத்த வருடத்தில் அவரது பண்ணையில் இருந்து அதிக பால் கிடைத்தது. அவரும் அதன் மூலம் அதிக வருமானத்தை பெறத் தொடங்கினார்.

இது ஒரு உதாரணமான பண்ணை தான். இது போல் நாடெங்கினும் பல பண்ணைகள் உள்ளன. வருடக் கணக்கில் மாடுகளை சினைப் படாமல் வைத்துக் கொண்டு பல பண்ணையாளர்கள் நட்டமடைகிறார்கள். பல விடயங்களை இலகுவான முகாமைத்துவ மாற்றங்களை செய்வதன் மூலம் சரிப்படுத்தலாம். சில வற்றுக்கும் சினைப் பருவ ஒருங்கிணைப்பை செய்வதன் மூலம் அந்த மாடுகளை சினைக்கு கொண்டு வர முடியும். அண்மைக் காலத்தில் நான் பரவலாக அவதானித்த விடயம் பண்ணை அமைந்த காலநிலை வலயத்துக்கு பொருத்தமற்ற மாடுகளை வளர்ப்பது. உதாரணமாக குளிரான கண்டி நுவரெலியாவில் வளர்க்கப்படும் பிரீசியன் மாடுகளை வெப்பம் கூடிய வவுனியா யாழ்ப்பாணம் பகுதிகளில் வளர்க்க முடியாது. உண்ணிக் காய்ச்சல் போன்ற நோய்களும் வெப்ப அயர்ச்சி போன்ற நிலைகளும் ஏற்பட்டு மாடுகளின் உற்பத்தி குறைவதோடு பல மாடுகள் இறந்தும் போகின்றன. இலங்கையில் ஒவ்வொரு பகுதிக்கும் பொருத்தமான இனப் பெருக்க கொள்கை [breeding policy] உள்ளது. அதில் உள்ளவாறு மாடுகளை தேர்ந்தெடுத்தால் பெருமளவு இம்மாதிரியான பிரச்சனைகள் ஏற்படாது.

அண்மைக் காலத்தில் உலகம் முழுதும் வெப்ப அயர்ச்சி காரணமாக சினைப் பட்ட பல மாடுகளில் ஆரம்ப கால கருச் சிதைவு [early embryonic death] ஏற்படுகிறது. இதன் பின்னர் நீண்ட காலத்துக்கு அந்த மாடுகள் சினை அறிகுறிகளை காட்டாத நிலைக்கு மாறி விடுகின்றன. சினைப்படுத்தப்பட்ட மாடுகளில் இரண்டு மூன்று மாதங்களில் கர்ப்ப பரிசோதனை [ Pregnancy diagnosis] செய்வது நல்லது. இல்லாது போனால் மாட்டை சினைப்படுத்தியதாக உரிமையாளர் எண்ணிக் கொண்டு இருப்பார். உண்மையில் வெப்ப அயர்ச்சி காரணமாக மாடு ஆரம்ப கால கருச் சிதைவுக்கு உள்ளாகியிருக்கும். பெரியளவுக்கு கருச்சிதைவு அறிகுறிகளை காட்டாது என்பதோடு சாதரணமாக மாடுகள் காட்டும் சினைப் பருவ அறிகுறிகளையும் காட்டாது அமைதியாக இருக்கும். உரிமையாளர் உரிய காலம் வந்தும் கன்று போடாத போதுதான் உண்மையை உணர முடியும். அதற்குள் ஒரு வருடம் கடந்து விடும். எனவே பொருத்தமான வைத்தியரை கொண்டு சினைப் பரிசோதனை செய்வது அவசியம். ஒரு பண்ணையில் உற்பத்தியற்ற வயதான கால்நடைகளை அவற்றுவது அவசியமானது. இல்லாது போனால் உற்பத்தியில் உள்ள ஏனைய மாடுகளுடன் உணவு, இருப்பிடத்துக்கு போட்டி போடும். மேலும் அதிகளவான மாடுகளை குறைவான மனித வலுவுடன் பராமரிப்பதும் தவறான முறையாகும். இதனால் எல்லா மாடுகளும் சரிவர கவனிக்கப் படாமல், நோய் நிலை, சினைப் பருவ அறிகுறிகளை சரி வர அவதானிக்க முடியாத நிலை தோன்றும். எனவே தேவையான வேலையாட்களை எடுக்க வேண்டும். அல்லது வேலையாளின் அளவுக்கு ஏற்ப கால்நடைகளை குறைக்க வேண்டும்.

மாடுகளின் வெற்றிகரமான சினைப் படுத்தலுக்கு அவற்றின் உடல் நிலையை சரியான அளவுக்கு ஏற்ப பேணுவது அவசியம். முறையான ஊட்டம், குடற்புழு நீக்க மருந்துகள் வழங்குதல், நோய்களுக்குரிய தடுப்பூசிகள் வழங்குதல் என்பவை அவசியமானவை. நோயற்ற கால்நடைகள் விரைவாக வளர்ந்து சினைப் பருவத்துக்கு வரும் என்பதோடு இனப் பெருக்கத்துக்கு தேவையான ஹோர்மோன்களும் தேவையான அளவில் சுரக்கும்.

இறுதியாக செயற்கை முறை சினை படுத்தலில் உள்ள குறைபாடுகளை குறிப்பிட்டே ஆக வேண்டும். பண்ணையாளர்கள் சினைப் பருவ அறிகுறிகளை சரியாக அவதானிப்பதில்லை. நேரம் பிந்திய நிலையிலேயே பெரும்பாலான சினைப் படுத்தல்கள் நிகழ்கின்றன. மேலும் இன்றைய பல செயற்கை முறை சினைப் படுத்தல்காரர்கள் தமது சினைபடுத்தல் வேலைக்கு புறம்பாக சட்ட விரோதமாக நோய்களுக்கு வைத்தியமும் பார்ப்பதால் அவசர கதியில் நிதானமற்று சினைப் படுத்துகின்றனர். இதனால் பல சினைப் படுத்தல்கள் பிழைக்கின்ற நிலையையும் அவதானிக்க முடிகிறது. இப்படியான சந்தர்ப்பங்களில் சினைப்படுத்தலை நம்பி மாடு வளர்ப்பவர்கள் பாதிக்கப் படுகின்றனர். நான் பொதுவாக் பல விடயங்களை, சினைபடுதல் தொடர்பாக இந்த வாரம் தொட்டுச் சென்றுள்ளேன். அடுத்த வாரம் இன்னொரு விடயத்தைப் பார்ப்போம்.



எப்.சியான்சன்
ஊடக கற்றைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

# வட பகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

கடல் வளம் இயற்கை எமக்களித்த அருங்கொடையாகும். விதையில்லாமலே பயன் தருகின்ற வளமாக கடல் வளமாக காணப்படுகின்றது. அந்த வகையில் வட பகுதியில் உள்ள கடல் வளங்கள் செழிப்புடன் விளங்குவதற்கு வட பிராந்தியத்தின் சமுத்திர சூழல் இயல்புகளை முக்கிய காரணிகளான அமைகின்றன. முக்கியமாக நான்கு கடற் பரப்புகளை உள்ளடக்கிய வட மாகாணம் மன்னார் விரிகுடா, பாக்கு குடா, பாக்கு நீரிணை பகுதி, வங்காள விரிகுடா சார்ந்த கடல் பரப்புக்களை கொண்டுள்ளது. இப்பகுதி கடல் வளம் நிறைந்து காணப்படுவதால் சமுத்திரச் சூழல் சிறப்பானதாக காணப்படுகின்றது.

அண்மைக்காலமாக பாக்கு நீரிணைப் பிரதேசத்தில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது பலராலும் பேசப்படும் ஒரு விடயமாக உள்ளது. வடக்குப் பிரதேசமானது இலங்கையின் ஏனைய கரையோர பிரதேசங்களில் அல்லாத தனி சிறப்பு வாய்ந்த சமுத்திர சூழலை கொண்டிருப்பதுடன் சிறப்பான கரையோர அம்சங்களையும் கொண்ட பகுதியாகும். அதன் அமைவிடம் அதன் அமைப்பு காரணமாக இயற்கையாகவே கடல் வளம் நிறைந்த ஒரு பகுதியாக அமைந்துள்ளது.

இப்பிரதேசத்தில் கரையோரங்களில் கடல் வளத்துறையானது நீண்ட காலமாக பிரதான இடத்திலேயே இருந்து வருகின்றது. கிழக்கு வடமராட்சி, கிழக்கு முதல் முல்லைத் தீவு கரையிலிருந்து 200 கடல் மைல் தூரம் வரையிலான பகுதி ஆகியவை ஆழ் கடல் மீன் பிடிக்கும் இடங்களாக காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை வலி வடக்கு, வடமராட்சி வடக்கு மற்றும் தீவகப் பகுதி, யாழ் ஏரி தீவகம், ஆனையிறவு ஏரி வரையிலான நீண்ட கரையோர பகுதியும் ஏரி சார்ந்த பண்புகளையும் கொண்டுள்ளன. இதனால் ஏரி சார்ந்த இடங்கள் மீன்பிடியில் சிறப்பிடம் பெறுகின்றன.

யாழ்ப்பாண மீனவர்கள் சுதந்தரத்துக்கு

> ஆரம்பத்தில் நெடுந்தீவு, பாக்குநீரிணை ஆகிய கடற்பரப்புகளில் மாத்திரம் இந்திய மீனவர்களின் ஊடுருவல் காணப்பட்டது தற்போது மன்னார் குடாவின் தென்பகுதியிலும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகளவு காணப்படுகின்றன.

அடுத்து வந்த காலப்பகுதியிலும் அதற்கு முந்தைய காலப்பகுதியிலும் மீன்பிடித் துறையில் பாரிய பிரச்சினைகள் எதனையும் எதிர்கொள்ளவில்லை. இருப்பினும் 1980களை அடுத்து வந்த காலப்பகுதியில் நிலவி வந்த அசாதாரண அரசியல் பிரச்சினைகளால் மிக மோசமாகப் பாதிப்படைந்தனர். 2009 வரையிலும் போர்



நீடித்துக் கொண்டிருந்தமையால் அதுவரையும் இத்துறை மிக மோசமாக பாதிப்படைந்திருந்தது. 2009இல் போர் முடிவுக்கு வந்த பின்னர் இயல்பு நிலைக்கு மக்கள் திரும்பி மீண்டும் தனது மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்தபோது பல சவால்களை எதிர்கொள்ள நேரிட்டது.



வட மாகாண மீனவர்கள் இன்று எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளில் குறிப்பாக இந்திய மீனவர்கள் ஊடுருவல், தென்பகுதி மீனவர்களின் வருகையினால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் சட்டப்பூர்வமற்ற மீன்பிடி செயற்பாடுகள் உயர் பாதுகாப்பு வள நெருக் கடிகள் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். வட பகுதி மீனவர்கள் பாரம்பரிய முறையிலான மீன் பிடித்தல் முறையை இன்னமும் பின்பற்றி வருகின்றனர்.

வடபகுதி இலங்கை மீனவர்கள் பைபர் படகுகளும் கட்டுமரம் வள்ளம் இறால்கூடுகள், கரை வலைகள், வீச்சு வலைகள், நீள்வரிசை தூண்டில்கள் போன்றவற்றை மரபு வழி உபகரணங்களாக பயன்படுத்தும் அதேவேலை இந்திய தென்பகுதி மீனவர்கள் வர்த்தக ரீதியான மீன்பிடித்தல் முறையிலான ரோலர், இழுவைப்படகுகள், டைனமைட் போன்றவற்றை அதிகம் பயன்படுத்துகின்றனர். கடல் வளங்களை பாதிக்கும் மீன்பிடி உபகரணங்களான ரோலர், இழுவைப்படகுகள் கடல்வள அடித்தளம் வரையிலாக காணப்படும் மீன் வளங்களையும் முருங்கைக்கட்பாளர்களையும் சேதமடைய செய்வதுடன் மீன்வள இனப்பெருக்க சாதகமற்ற தன்மையினை ஏற்படுத்துகின்றது. மேலும் அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையிலான டைனமைட் பயன்படுத்தி மீன் பிடித்தல் உலோக்கம்பிகள் கொண்டு தயாரிக்கப்பட்ட சிறகுவலைகள், சுருக்குவலைகள், தங்கூசி வலைகள் போன்றவற்றை சட்டவிரோதமாகப் பயன்படுத்துவதனால் வடபகுதி மீன்வளம் மிகவும் பாதிப்படைகின்றது.

ஆரம்பத்தில் நெடுந்தீவு, பாக்குநீரிணை ஆகிய கடற்பரப்புகளில் மாத்திரம் இந்திய மீனவர்களின் ஊடுருவல் காணப்பட்டது தற்போது மன்னார் குடாவின் தென்பகுதியிலும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகளவு காணப்படுகின்றது. இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியால் வடபகுதி மீனவர்கள் பெருமளவு பாதிப்படைந்து வருகின்றனர். இவர்கள் பெருமளவு கடல் வளங்களை சூறையாடி செல்வதால் இலங்கை வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைவதோடு, கடல்சார் உற்பத்தியில் பொருளாதார பின்னடைவு, சூழல் தாக்கம் மற்றும் மீனவ நல வாழ்விலும் பெருமளவு தாக்கங்களை எதிர்கொள்ளப்படுகின்றன. இச்சட்ட விரோத பின்படியால் மீனவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 2 லட்சம் தொடக்கம் 4 லட்சம் வரை வருமானத்தை இழக்கின்றனர்.

இதனால் வடபகுதி மீனவர்களின் வாழ்க்கை நிலை பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. இத்தாக்கத்தினால் இலங்கை கடலுணவு உற்பத்தியாளர்கள் உற்பத்திக் கொள்ளளவு ஆற்றலை விட குறைவாகவே உற்பத்தி செய்கின்றனர். ஒவ்வொரு வருடமும் பத்து முதல் 20 மில்லியன் டாலர்கள் இழக்கப்படுகின்றன. வடபகுதியில் ஆழ் கடல் மீன் பிடித்தொழில் மேற்கொள்ள ஏதுவான சூழல் அமைப்பு காணப்பட்ட போதும் அதனை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளில் சரியாக மீனவர்களுக்கு ஏற்பட்டு கொடுக்கப்படவில்லை. மேலும் இந்திய இலங்கை ஆகிய இருதரப்பு மீனவர்களும் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் போது அவர்கள் மத்தியில் மோதல்கள் ஏற்படுவதுடன் பலர் சிறை பிடிக்கப்படுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதுடன் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் "இந்திய மீனவர்களை கடற்படை தடுக்க தவறினால், அந்த மீனவர்களை நாங்களே தாக்குவொம்" என்று இலங்கை யாழ்ப்பாணம் மீனவர்கள் கடந்த காலங்களில் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மீனவர்களின் நிலைப்பாட்டை ஆமோதிக்கும் வகையில் இலங்கை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கருத்து தெரிவித்திருந்தார். இருப்பினும் மீனவர்கள் கோரியபடி அவர்களின் பிரச்சனைகளுக்கு எழுத்து பூர்வ உத்தரவாதத்தை தர அமைச்சர் மறுத்ததால் அவர் மீது யாழ்ப்பாணம் மீனவர்கள் அதிருப்தியுடன் காணப்படுகின்றனர்.

இதனைத் தொடர்ந்து யாழ் மாவட்ட கடற்றொழில் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அனைத்து கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் முக்கிய சவால்களில் கடலட்டை பண்ணைகள் முக்கியமானவையாகும். அதிகம் முதலீடு, அதிக லாபம் என கருதி யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வேலணை, குடாத்தீவு, குருநகர், கொழும்புதுறை, பாசையூர் ஆகிய பகுதிகளில் கடலட்டை பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கடலட்டை பண்ணைகளில் 70 கடலட்டை பண்ணைகள் சங்கத்துக்கு சொந்தமாக இருப்பதுடன் ஏனையவை தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமாக உள்ளன. இதில் அதிக அளவு வருமானம் கிடைக்கப் பெற்றாலும் ஏனைய மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் அதிக அளவு பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

இப்பண்ணைகள் அமைக்கும் போது சீமெந்து மற்றும் கல்லிலான கொட்டில்கள் அமைக்கப்படும் போது ஏனை கடலடி உயிரினங்களுக்கு பாதிப்பாக அமைகின்றது மீனவர்களுக்கு சிறந்த மீன்வளம் கிடைப்பதில் தடை ஏற்படுகின்றது.

இவ்வாறு தொடர்ந்து வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டால் மாத்திரமே வடபகுதி மீனவர்களின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும்.

வடபகுதியில் இருந்து உற்பத்தி செய்யப்படும் இறால், சிங்கு இறால், நண்டு, கணவாய் போன்ற பெறுமதியான மீன் வகைகள் உற்பத்தி செய்யப்படுவதால் இவை ஏற்றுமதி செய்யப்படுவதுடன் பெருமளவு அந்நிய செலவாணியை பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

இந்திய அரசு தென்னிந்திய மீனவர்களுக்கு ஆழ்கடலில் இழுவை மீன் பிடித்தல் முறையை நிறுத்த தடை செய்வதோடு தூண்டில் வரிசை, படுப்புவலை ஆகிய முறைகளை ஊக்குவிப்பதுடன் கரையோர மீன் வளர்ப்பு முறைக்கு உதவ வேண்டும். இதன் ஊடாக இந்திய மீனவர்கள் வட பகுதியில் மீன்பிடித்தலை தடுக்க முடியும். எமது நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்று மீனவர்களின் வாழ்வைப் பலப்படுத்தும் பொறுப்பு இலங்கை அரசாங்கத்துக்கு உரியது இதனை கருத்தில் கொண்டு இலங்கை அரசாங்கம் செயற்பட்டால் பிரச்சினைகளுக்குத் தீர்வினை பெறுவதுடன் பொருளாதார முன்னேற்றத்தினை அடையவும் முடியும்.

# சண்முகத்தார் ஒரு சங்கதி கேட்டியளோ..?





## எங்கட ஆச்சி



**- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -**

முந்தி எங்கட ஊரில மாடு வளத்தவையின்ர வீடுகளிலை அனேகமாக மத்து இருக்கும். தயிரைக் காலமையில இந்த மத்தால கடைஞ்சுதான் வெண்ணெய் எடுக்கிறவை. வெண்ணெய் எடுத்து மிஞ்சிற கொழுப்பில்லாத தயிரைத்தான் மோர் எண்டு சொல்லுறவை. எங்கட ஆச்சி கையாலதான் ரெண்டு உள்ளங்கையளுக்கும் இடையில மத்தைப் பிடிச்சுக்கடையிறவ. சிலர் மத்தைச் சுத்திறதுக்கு கயிறைப்பாவிக்கிறவை. எங்கட வெளிநாட்டில உள்ளவை புரொசெசரில போட்டு அடிச்சா டக்கெண்டு வெண்ணெய் பிரிக்கலாம் மத்தால கடையிறது வீண் வேலை எண்டுவினம்.



எங்கட ஆச்சி மத்தால தயிர் கடையிறது உடம்புக்கு நல்ல பயிற்சி எண்டுவா. கைத்தசையளுக்கு நெஞ்சுத்தசையளுக்கு நல்ல பயிற்சி எண்டுவா. குறிப்பா பெண்டுகளுக்கு முலை தொய்யாது முலை சம்பந்தமான கண்ட கிண்ட வருத்தம் ஒண்டும் வராது எண்டுவா. ஆச்சி சொல்லுறது உண்மைதான் ஏனென்டால் அவ கடைசிவரையும் உள் சட்டை எண்ட பிறா போடாம இருந்தவ. உண்ணான அவ வுக்கு அது தேவைப் படேல்லை.

அது மட்டுமில்லை குந்தி இருந்து மத்தால தயிர் கடையிறது இடுப்புக்கு காலுக்கு எல்லாம் நல்ல பயிற்சி. மூட்டு வருத்தம் வராது இடுப்பு எலும்பு நல்ல பலமா வரும். உப்பிடி இடுப்பு நல்ல பலமா இருந்தா வயித்தில பிள்ளை இருக்கேக்கை பாரமா இருக்காது அதோட கஸ்ரப்படாம பிள்ளைப் பெறலாம் எண்டுவா. முந்தி இப்பிடிப் பலதும் பத்துமான வேலைகளை வீடுவழிய செய்த படியால முந்தி எங்கட பெண்டுகள் நல்ல ஆரோக்கியமா மட்டுமில்லை அஞ்சாறெண்டு பஞ்சிப்படாமல் பிள்ளையளைப்பெத்து வளத்து ஆளாக்கினவை எண்டுவார் அப்பு. இப்ப ஒண்டைப் பெறுகிறதுக்கே முக்கு முக்கு எண்டு முக்குகினம் எண்டுவார்.

உந்த தயிரால மத்து கடையிற விசயம் எங்கட புராணத்திலையும் வருகுது. தேவர்களும்அசுரர்களும்மேரு மலையை மத்தாகவும் வாசுகி எண்ட பாம்பைக் கயிறாகவும் பாவிச்சு பாற்கடலைக் கடையேக்கை அவங்கள் போட்டி போட்டு கடைஞ்ச வேகத்தில வாசுகி ஏலாம நோவில கத்தி நஞ்சைக் கக்கினதெண்டும் அந்த நஞ்சைச் சிவபெருமான் தன்ர கண்டம் எண்ட கழுத்தில எடுத்து வைச்சவராம். அதால அவற்றை கழுத்து நீலம் பாரிச்சு இருந்ததால திருநீலகண்டர் எண்டு பெயர் வந்தது எண்டு முந்தி அப்பு சின்ன வயசில சொன்ன ஞாபகம் இருக்குது.

திருநீலகண்டப்பதிகம் பாடினா வருத்தங்கள் குறையும் தற்செயலா வருத்தங்கள் வந்தாலும் அந்த வருத்தங்களால வாற விளைவுகள் குறையும் இல்லாட்டில் இல்லாமல் போகும் எண்டது சைவர்களின் நம்பிக்கை எண்டு ஆச்சி நெடுகவும் சொல்லுறவ.

உந்தப் பாற்கடலைக் கடைஞ்ச கதையை இளங்கோவடிகள் நல்ல வடிவாச் சொல்லுறார் எண்டு அப்பு சொன்ன ஞாபகம்.

“வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை அசோதையார் கடை கயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே”

உந்தக்கதையைக் கம்பரும்,

“மத்து மந்தரம் வாசுகி கடை கயிறு அடை தூண்
மெத்து சந்திரன் சுராசுரர் வேறு வேறு உள்ள
கொத்து இரண்டு பால் வலிப்பவர் ஓடதி கொடுத்து,
கத்து வாரிதி மறுகுற, அமிழ்து எழக் கடைமின்”

எண்டு அகலிகையைப்பற்றிக் கதைக் கேக்கை கதைக்கிறார் எண்டு ஆச்சி சொல்லுறவ. கம்பர் இன்னும் கன இடங்களில உந்த மத்து பற்றிய விசயங்களை கதைக்கிறார். இதுமாதிரி மத்து பற்றிய செய்தியள் சீவகசிந்தாமணி மாதிரி பழைய இலக்கியங்களில இருக்கெண்டு எங்கட ஆச்சி சொல்லுறவ. நாங்கள் இப்ப மறந்து போன விசயங்களிலை உந்த மத்தும் ஒண்டு. இப்பத்தே பெடி பெட்டையளை மத்து எண்டால் என்ன எண்டு தெரியுமோ எண்டு கேக்கேக்கை அதுகள் தெரியாமல் முழிக்கேக்கை போட்டு மொத்த வேணும் போல இருக்கும்.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2023இல் வெளியிடப்பெற்றது.